بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 10

இதழ் 1- 2

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ரஜப் 02 - 09 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - ஸுல்ஹ் 02- 09 ★ 02 - 09 டிசம்பர் 2024

## அல்லாஹ்வின் கட்டளை

هُوَالَّذِیۡ جَعَلَ لَکُمُ الَّیۡلَ
لِتَسۡکُنُوۡا فِیۡهِ وَالنَّهَارَ مُبۡصِرًا ؕ
اِنَّ فِیۡ ذٰلِکَ لَاٰیٰتٍ لِّقَوۡمٍ یَّسۡمَعُوۡنَ

**பொருள்**

அவனே இரவை உங்களுக்காக நீங்கள் அதில் ஓய்வு பெறுவதற்காக ஆக்கினான். பகலை (வேலை செய்வதற்காக) ஒளிமிக்கதாகவும் ஆக்கினான். (இறைத் தூதை) கேட்பவர்களுக்கு நிச்சயமாக இதில் பல்வேறு அடையாளங்கள் உள்ளன.
(யூனுஸ்: 68)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

---

வல்லமையும் மேன்மையும் பொருந்திய அந்த அல்லாஹ் தனது இருப்பைக் குறித்து தானே செய்தி வழங்கும் அந்த நாளில் தான் வல்ல இறைவனின் மீது முழுமையான ஈமான் ஏற்படுகின்றது என்பது முற்றிலும் உண்மையாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

அல்லாஹ்வின் மீது நேசம் கொள்ளக் கூடியவர்கள் எங்களில் தான் அதிகமான நபர்கள் இருக்கின்றனர் என்று ஒவ்வொரு சமுதாயமும் வாதம் செய்கின்றது. ஆனால், வல்ல இறைவனும் அவர்கள் மீது நேசம் கொண்டுள்ளானா? என்பதுதான் தேவையான சான்று ஆகும். மேலும் வல்ல இறைவனின் நேசம் என்பது இதுவாகும். அதாவது, அவர்களின் உள்ளங்களிலிருந்து அந்த திரைகள் அகற்றப்பட வேண்டும்; அதாவது எந்தத் திரையின் காரணமாக நல்ல முறையில் இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை கொள்வதில்லையோ மேலும், மங்கலான மற்றும் சற்று இருளான இறை ஞானத்துடன் அவனது இருப்பை ஏற்றுக் கொள்கின்றாரோ அந்தத் திரைகள் அகற்றப்பட வேண்டும். இன்னும் கூறப்போனால் சோதனையான காலகட்டத்தில் மனிதன் அந்நிலையில் இறைவனின் இருப்பையே மறுத்து விடுகின்றான். எனவே இந்தத் திரைகள் அகற்றப்படுதல் என்பது இறை உரையாடலின்றி வேறு எந்த வகையிலும் நிகழவே முடியாது. எனவே (நான் இருக்கின்றேன்) என்று எந்த நாள் வல்ல இறைவன் அடியாரை விழித்து நற்செய்தி வழங்குவானோ அன்றுதான் மனிதனின் இறைஞானம் என்பது வெறும் கற்பனை அளவிலோ அல்லது வெறும் கூறப்பட்ட எண்ணங்களின் அளவிலானதாகவோ வரையறுக்கப்பட்டதாக இருக்காது. மாறாக, வல்ல இறைவனுடன் அவர் எவ்வாறு நெருங்கி விடுகின்றார் என்றால், ஒருவகையில் அவர் அந்த இறைவனைப் பார்க்கின்றார். மேலும், இது உண்மையாகும்; முற்றிலும் உண்மையாகும். அதாவது வல்லமையும் மேன்மையும் பொருந்திய அந்த அல்லாஹ் தனது இருப்பைக் குறித்து தானே செய்தி வழங்கும் அந்த நாளில் தான் வல்ல இறைவனின் மீது முழுமையான ஈமான் ஏற்படுகின்றது.

இறைவன் அடியாரை நேசிப்பதற்கான இரண்டாவது அடையாளம் இதுவாகும்; அதாவது அவன் தனது அன்பிற்குரிய அடியார்களுக்கு

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

---

**ஸஃபா மற்றும் மர்வா குன்றில் ஏழு முறை ஓட வேண்டி உள்ளது. இவ்வாறு ஓடுதல் என்பது ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) அவர்களின் அடிச்சுவட்டில் நடப்பதற்கான ஒப்புதல் ஆகும். இவ்வாறு ஓடுவது இந்த விஷயத்திற்கான அறிவிப்பு ஆகும். அதாவது ஒரு நேரத்தில் எங்களுக்கும் இறைவனுக்காக எங்களது அன்பிற்குரியவர்களை விட்டுவிட நேர்ந்தால் பின்னார் நாங்களும் அவர்களை விட்டு விடுவதற்கு எவ்வகையிலும் தயங்க மாட்டோம்**

وَاِذۡ بَوَّاۡنَا لِاِبۡرٰهِیۡمَ مَکَانَ الۡبَیۡتِ اَنۡ لَّا
تُشۡرِکۡ بِیۡ شَیۡـًٔا وَّطَهِّرۡ بَیۡتِیَ لِلطَّآئِفِیۡنَ
وَالۡقَآئِمِیۡنَ وَالرُّکَّعِ السُّجُوۡدِ ﴿۲۷﴾ (22:27)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்: இன்றிலிருந்து நான்காயிராம் ஆண்டுகளுக்கு முன்னர் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் எந்த முன்மாதிரியை காட்டினார்களோ அந்த உண்மையான சம்பவத்தை ஹஜ் புதுப்பிக்கின்றது. அந்த சம்பவத்தின் விளைவுகள் இன்று வரை உலகில் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் உவ்ருடைய பூமியில் இன்றிலிருந்து நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் இணை வைப்பாளரின் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தது.
(காண்க : ஆதியாகமம் : அதிகாரம் 11: வசனம்: 28)

அவர் எந்த மக்களில் தர்பிய்யத் பெற்றார் என்றால் அந்த மக்கள் இரவும், பகலும் இறைவனுக்கு இணைய உருவாக்குவதிலும், சிலை வணக்கத்திலும் மூழ்கியிருந்தனர். ஆனால், அந்தக் குழந்தை ஓர் ஒளிமயமான உள்ளத்துடன் பிறந்தது. மேலும் குழந்தைப் பருவம் முதலே சிலைகளை அற்பமானவையாக பார்த்து வந்தது. மேலும் உலகின் அதிகரித்து வந்த வழிகேடு மற்றும் வழிகேட்டின் புயலைக் கண்டு மனித குலத்திலிருந்து ஒருவரை தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்று இறைவன் விரும்பினான். எனவே அவனது ஆற்றல் மிக்க பார்வை கல்தேயரின் ஊரிலிருந்த இப்ராஹீமை தேர்ந்தெடுத்துக் கொண்டது.
(பைபுள்: ஆதியாகமம்: அதிகாரம் 11; 31)

மேலும் அவன் அவரை தனது அருளால் அபிஷேகம் செய்தான். மேலும், இப்ராஹீமே! நீ

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்.....

## நபிமொழி

(2588) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்ட போது, அன்னாரின் நோய் கடுமையானது. அப்போது அன்னார் (ஸல்) தமது துணைவியார்களிடம் இதற்கான அனுமதி பெற்றார்கள்: அதாவது அன்னார் (ஸல்) நோயின் நாட்களில் என்னுடைய வீட்டில் தங்குவார்கள். அவர்களும் அதற்கான அனுமதி கொடுத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டு நபர்களுக்கு மத்தியில் அவர்களின் துணையுடன் வெளியில் புறப்பட்டார்கள். அன்னாரின் பாதங்கள் நிலத்தில் கோடுகள் கிழித்துக் கொண்டிருந்தன. மேலும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் மற்றும் வேறொரு நபருக்கு மத்தியில் அன்னார் (ஸல்) இருந்தார்கள்.

**அன்பளிப்பு கொடுத்து விட்டு திரும்பப் பெறுவதற்கான உதராணம்**

(2589) ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தான் கொடுத்த அன்பளிப்பை திரும்பப் பெறக் கூடியவர், தான் எடுத்த வாந்தியை தானே மீண்டும் உண்டு விடுகின்ற அந்த நாயைப் போன்றவர் ஆவார்.

**ஸதகா கொடுங்கள்; பூட்டி வைக்காதீர்கள்**

(2590) ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் ஸுபைர் (ரலி) கொண்டு வந்து கொடுத்த செல்வத்தைத் தவிர வேறு எந்த செல்வமும் இல்லை; நான் அதிலிருந்து ஸதகா கொடுக்கலாமா? என்று நான் கேட்டேன். அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

ஸதகா கொடுங்கள்; (செல்வங்களைப்) பூட்டி வைக்காதீர்கள்; இல்லையென்றால் உங்களுக்கும் பூட்டி வைக்கப்படும். (புகாரி, கிதாபுல் ஹிபா)

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹுதைபியா போர் நடவடிக்கையின் பின்னணி & சூழல் மற்றும் முக்கிய நிகழ்வுகள்**

ஹுதைபியா எனும் இந்த இடத்தில் தான் முஸ்லிம்களுக்கும், குறைஷிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டது.
அது ஹுதைபியா சமாதான உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது.
அறிவிப்பில் இது ஹுதைபியா போர் நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது

அந்த இரவிலோ அல்லது அதற்கு நெருக்கமான நேரத்திலோ மழையும் பெய்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழுகைக்காக வருகை தந்த போது, மைதானம் நனைந்திருந்தது.அன்னார் (ஸல்) ஸஹாபிகளை பார்த்து புன்சிரித்தவாறு, இந்த மழையின் போது உங்களுடைய இறைவன் என்ன கூறினான்? என்று நீங்கள் அறிவீர்களா? என்று கேட்டார்கள். ஸஹாபிகள் வழக்கம் போல, இறைவனும், அவனுடைய தூதருமே நன்கு அறிவார்கள் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: இறைவன் என்ன கூறினான் என்றால், என்னுடைய அடியார்களில் சிலர் இந்த (விடியல்) காலையை உண்மையான ஈமானுடன் கண்டார்கள். சிலர் நிராகரிப்பில் விழுந்து தடுமாறி விட்டனர். ஏனெனில், நம் மீது இறை அருளாலும், கருணையாலும் மழை பெய்தது என்று எந்த அடியார் கூறினாரோ அவர் ஈமானின் உண்மையில் நிலைத்திருந்தார். ஆனால், இந்த மழை இன்னின்ன நட்சத்திரங்களின் தாக்கத்தின் விளைவாக பெய்தது என்று எவர் கூறினாரோ அவர் சூரிய, சந்திரன் மீது நம்பிக்கை கொண்டு இறைவனுக்கு மாறு செய்து விட்டார் என்று கூறினார்கள்
(ஸீரத் காத்தமுன் நபிய்யீன்)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 நவம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **15 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹுதைபியா சமாதான உடன்படிக்கை தொடர்பான குறிப்பை இன்று நான் ஆரம்பிப்பேன். ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கை துல்கஅதா மாதம் ஹிஜ்ரீ 6-இல் அதாவது, மார்ச் 628-ம் ஆண்டு நிகழ்ந்தது. இது ஹுதைபியா போர் நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது. ஹுதைபியா போர் நடவடிக்கையை குறித்து அல்லாஹ் சூரா ஃபத்ஹ் எனும் முழு அதிகாரத்தையே இறக்கியுள்ளான். அந்த அதிகாரத்தின் அருளுக்குரிய ஆரம்ப வசனங்கள் என்னவென்றால், அல்லாஹ் கூறுகின்றான்:

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ
اِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِيْنًا ﴿۲﴾
لِّيَغْفِرَ لَكَ اللّٰهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْۢبِكَ
وَمَا تَاَخَّرَ وَيُتِمَّ نِعْمَتَهٗ
عَلَيْكَ وَيَهْدِيَكَ صِرَاطًا مُّسْتَقِيْمًا ﴿۳﴾
وَّيَنْصُرَكَ اللّٰهُ نَصْرًا عَزِيْزًا

பொருள்:

நிச்சயமாக நாம் உமக்கு மிகத் தெளிவான வெற்றியினை வழங்கியுள்ளோம். இதன் விளைவாக உமது ஒவ்வொரு கடந்த கால மற்றும் எதிர் கால தடுமாற்றங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான். மேலும் உம் மீது தன் அருளை முழுமைப்படுத்தி உமக்கு நேரான வழியினைக் காட்டுவான். மேலும் அல்லாஹ் உமக்கு கண்ணிய மிக்க, வல்லமை மிகு உதவியைச் செய்வான்.

ஹுதைபியா போர் நடவடிக்கை என்று இது ஏன் கூறப்படுகிறது? என்பதைக் குறித்தும் அதன் அறிமுகம் என்ன என்பதை குறித்தும், சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன். ஹுதைபியா என்பது ஒரு கிணற்றின் பெயராக இருந்தது. அதன் காரணமாக அந்த இடத்திற்கு ஹுதைபியா என்று பெயர் வந்து விட்டது. இஸ்லாத்தின் துவக்க காலத்தில் இந்த கிணறு பயணிகளுக்கும், ஹாஜிகளுக்கும் பயன்பட்டு வந்தது. ஆனால், எவ்வித குடியிருப்பும் அங்கு இருக்கவில்லை. மக்காவில் இருந்து ஹுதைபியா 250 மைல் தூரத்தில் உள்ளது. இவ்வாறு மதீனாவில் இருந்து ஹுதைபியா வரைக்கும் உள்ள இடைவெளி ஏறக்குறைய 241 மைல் ஆகும். ஹரம் மக்காவின் மேற்கு எல்லையாக ஹுதைபியா உள்ளது. சிலரை பொருத்த வரை அதனுடைய பெரும் பகுதி ஹரமுக்குள் உள்ளது; கொஞ்சம் பகுதி ஹரமுக்கு வெளியே உள்ளது. ஹுதைபியா எனும் இந்த இடத்தில் தான் முஸ்லிம்களுக்கும், குறைஷிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டது. அது ஹுதைபியா சமாதான உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. அறிவிப்பில் இது ஹுதைபியா போர் நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது. ஓர் அறிவிப்பில் இதை திஹாமா போர் நடவடிக்கை என்றும் கூறப்பட்டுள்ளது. மக்கா மற்றும் அதனுடைய சுற்று வட்டாரப் பகுதிகளை கடுமையான வெப்பம் மற்றும் அனல் காற்றின் காரணமாக திஹாமா என்று கூறுவார்கள். இதன் காரணமாக அந்த இடத்திற்கு திஹாமா என்று பெயர் வந்து விட்டது. அறிவிப்புகள் மற்றும் வரலாற்றில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு கனவின் அடிப்படையில் ஹுதைபியா பயணம் மேற்கொண்டார்கள். அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கனவில், அன்னார் தம் தோழர்களுடன் அமைதியான சூழலில் தம் தலைகளை மழித்த நிலையிலும், முடிகளை கத்தரித்த நிலையிலும் மக்காவில் நுழைகிறார்கள் என்றும், அன்னார் (ஸல்) பைத்துல்லாஹ்வுக்குள் நுழைகிறார்கள் என்றும், அதன் திறவுகோலை வாங்கிக் கொண்டார்கள் என்றும், அரஃபா மைதானத்தில் தங்கி இருந்தவர்களுடன் அன்னாரும் தங்கி இருக்கிறார்கள் என்றும் காட்டப்பட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் (இந்தக் கனவை கண்ட பிறகு) அரேபிய மக்களையும், காட்டரபிகளையும் அழைத்து அனைவரையும் தம்முடன் செல்லுமாறு கூறினார்கள். அந்தப் பயணத்தில் முஸ்லிம்களிடத்தில் வாள்களைத் தவிர வேறு எந்த ஆயுதமும் இருக்கவில்லை. அந்த வாள்களும் கூட (அதன்) உறைகளில்தான் வைக்கப்பட்டிருந்தன. அக்கால மக்கள் தம் வீடுகளை விட்டு வெளியே செல்லும்போது, ஒவ்வொருவரும் தம்மிடத்தில் வாளை வைத்திருப்பர். வாளுடன் புறப்பட்டுச் செல்லக் கூடியவர் கண்டிப்பாக போரிடத்தான் செல்கிறார் என்று ஒருபோதும் கருதப்பட்டதில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, அபூ ஸுஃப்யான் மற்றும் அவருடைய தோழர்களின் சார்பாக தங்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஆபத்து இருக்கும்போது, தாங்கள் போருக்கான ஆயுதங்களை தம்முடன் ஏன் எடுத்துச் செல்வதில்லை என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் உம்ராவுக்கான எண்ணத்தில் செல்கிறேன். ஆகவே என்னுடன் ஆயுதங்களை எடுத்துச் செல்வதை விரும்பவில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் பெருமானார் (ஸல்) அவர்களுடைய இந்த கனவை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த கனவை கண்ட பிறகு உம்ராவுக்காக ஆயத்தமாகும் படி தம் ஸஹாபிகளிடத்தில் கூறினார்கள்: உம்ரா என்பது ஒரு சிறிய வகை ஹஜ் ஆகும். ஹஜ்ஜில் செய்யப்படுகின்ற சில இறை வணக்கங்கள் இதில் செய்யப்படாமல் பைத்துல்லாஹ்வை சுற்றி வருவது, குர்பானி கொடுப்பது ஆகியவை மட்டுமே போதுமானதாகக் கருதப்படுகிறது. ஹஜ்ஜுக்காக வருடத்தில் குறிப்பிட்ட மாதம் நிர்ணியக்கப்பட்டது போன்று இதில் கிடையாது. மாறாக, இந்த இபாதத் எல்லாவித காலகட்டத்திலும் நிறைவேற்றப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம், இந்த பயணத்தில் எவ்வித போர் நடவடிக்கையும் நோக்கம் கிடையாது. மாறாக, அமைதியான முறையில் மார்க்க வழிபாடு செய்வதே நோக்கமாகும். ஆகவே முஸ்லிம்கள் இந்த பயணத்தில் தம்முடன் ஆயுதங்களை எடுத்து வர வேண்டாம். மாறாக, அரேபிய வழக்கத்திற்கு ஏற்ப பயண வழிமுறைப்படி உரையில் இடப்பட்ட வாளை தம்முடன் கொண்டு வரலாம் என்றும் அறிவிப்பு செய்திருந்தார்கள்.

ஹுதைபியா போர் நடவடிக்கையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை என்னவாக இருந்தது? என்பதிலும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஓராயிரத்தையும் விட கொஞ்சம் அதிகமான ஸஹாபிகள் இருந்தார்கள் என்று ஓர் அறிவிப்பில் உள்ளது. மற்றொரு அறிவிப்பிலோ 1300 என்றும், இன்னோர் அறிவிப்பில் 1400 என்றும் கூறப்பட்டுள்ளது. சுருக்கமாக 1700 வரை எண்ணிக்கை இருந்ததாக அறிவிப்புகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆயிரத்திலிருந்து 1700 வரை பல்வேறு அறிவிப்புகள் கூறுகின்றன. புறப்படக் கூடிய நேரம் வந்தபோது, குர்பானி கால்நடைகள் ஹஸ்ரத் நாஜியா பின் ஜுன்தப் அஸ்லமீ அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டன. அவர்கள் அறவற்றை ஸுல் ஹுலைஃபா-க்கு கொண்டு சென்றார்கள். ஸுல் ஹுலைஃபா என்பது மதீனாவில் இருந்து 6 அல்லது 7 மைல் தொலைவில் இருந்த ஓர் இடமாகும். பயணத்திற்காக புறப்படுவதற்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் மதீனாவில் (தம்) பிரதிநிதியையோ அல்லது அமீரையோ நியமித்து வந்தார்கள். இப்னு ஸஅது அவர்களின் அறிவிப்புக்கு ஏற்ப, இந்த பயணத்திற்காக அன்னார் புறப்படுவதற்கு முன்பு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மு மக்தூம் (ரலி) அவர்களை பிரதிநிதியாக நியமித்தார்கள். ஆனால், இப்னு ஹஷ்ஷாம் அவர்களை அறிவிப்பின்படி பார்க்கும் போது ஹஸ்ரத் நுமைலா பின் அப்துல்லாஹ் அவர்களை பிரதிநிதியாக நியமித்தார்கள் என்று உள்ளது. ஆனால், பிலாதரீ அவர்களோ ஹஸ்ரத் அபூ ருஹ்ம் குல்ஸூம் பின் ஹுஸைன் அவர்களின் பெயரை எடுத்துரைத்துள்ளார்கள். சிலரை பொருத்த வரை, இமாமுஸ் ஸலாத்தாக ஹஸ்ரத் உம்மு முக்தூம் (ரலி) அவர்களை நியமித்தார்கள் என்றும், மற்ற அனைவரையும் பிரதிநிதிகளாக நியமித்தார்கள் என்று கூறப்படுகின்றது. (இது சம்பந்தமாக) பல்வேறு அறிவிப்புகள் காணாப்படுகின்றன.

பெருமானார் (ஸல்) அவர்களும், ஸஹாபிகளும் பயணத்திற்காக ஆயத்தமானதை குறித்தும், புறப்பட்டதைக் குறித்தும் இவ்வாறு விவரம் காணப்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு அறிவிப்பு செய்த பிறகு தன் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கு குளித்தார்கள். ஸுஹாரால் உருவாக்கப்பட்ட இரு உடைகளை அணிந்தார்கள். ஸுஹார் என்பது ஏமனில் உள்ள ஓர் குடியிருப்பாகும். அதனுடைய துணி நல்ல துணியாக கருதப்பட்டது. பிறகு அன்னார் (ஸல்) வந்தார்கள். கதவுக்கருகில் கஸ்வா எனப்படும் தம் பெண் ஒட்டகத்தின் மீது ஏறினார்கள். அந்த பயணத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் துணைவியார் ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்களும் அன்னாருடன் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) துல் கஅதா மாதத்தின் துவக்கத்தில் திங்கட்கிழமையன்று புறப்பட்டார்கள். ஸுல் ஹுலைஃபா சென்றடைந்த பிறகு அங்கு லுஹர் தொழுதார்கள். பிறகு குர்பானியுடைய கால்நடைகளைக் கொண்டு வரச் செய்தார்கள். அவற்றின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. அவற்றிற்கு மாலை இடப்பட்டது. பிறகு அன்னார் (ஸல்) சில ஒட்டகங்களுக்கு அடையாளமிட்டார்கள். அவை குர்பானியுடைய ஒட்டகங்கள் என்று அறியப்படுவதற்காக. பிறகு அன்னார் (ஸல்) ஹஸ்ரத் நாஜியா பின் ஜுன்துப் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டபோது, மற்ற ஒட்டகங்களுக்கும் அவர்கள் அடையாளமிட்டார்கள்; அவற்றுக்கும் மாலை அணிவிக்கப்பட்டன. மற்ற முஸ்லிம்களுக்கும் தம் கால்நடைகளுக்கு மாலையிட்டார்கள்; அடையாளமிட்டார்கள். அந்தப் பயணத்தில் முஸ்லிம்களிடத்தில் 200 குதிரைகள் இருந்தன.

பெருமானார் (ஸல்) அவர்கள் இஹ்ராம் அணிந்தது தொடர்பாக இவ்வாறு விளக்கம் காணப்படுகிறது. அன்னார் (ஸல்) இரு ரக்அத்துகள் தொழுதார்கள். பிறகு ஸுல் ஹுலைஃபாவுடைய பள்ளிவாசலின் கதவு வழியாக பயணித்து சென்றார்கள். பைத்துல்லாஹ்வை தரிசிப்பதற்காகவும், அதற்கு கண்ணியமளிப்பதற்காகவும் தாம் புறப்பட்டு விட்டதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அன்னார் (ஸல்) உம்ரா உடைய இஹ்ராமை அணிந்து கொண்டார்கள். பிறகு இவ்வாறு தல்பியா ஓத ஆரம்பித்தார்கள்.

لَبَّيْكَ اللّٰهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ
لَا شَرِيْكَ لَكَ لَبَّيْكَ
اِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ
وَالْمُلْكَ لَا شَرِيْكَ لَكَ

பொருள்:

நான் ஆஜராகி விட்டேன். அல்லாஹ்வே! நான் ஆஜராகி விட்டேன். உன் அழைப்பை ஏற்று வந்து விட்டேன். உனக்கு இணை கிடையாது. எல்லாப் புகழும், அருட்கொடையும் ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு இணையானவர் யாருமில்லை.

குறைஷியர்கள் ஏதேனும் விஷமத்திற்கான எண்ணம் கொண்டுள்ளார்களா என்று அவர்களின் நிலையை அறிந்து வருவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் புஸர் பின் ஸுஃப்யான் என்பவரை முன்னால் அனுப்பி வைத்தார்கள். அத்துடன் மேற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷர் (ரலி) அவர்களை 20 குதிரை வீரர்களுக்கு அமீராக நியமித்து முன்னால் அனுப்பி வைத்தார்கள். இன்னோர் அறிவிப்பில் அபூ கதாதா அன்ஸாரி (ரலி) அவர்களை அனுப்பி வைத்ததாக வருகின்றது. பல்வேறு இடங்களில் முகாமிட்டவாறு அன்னார் ரவ்ஹா என்ற இடத்தை அடைந்த போது, ரவ்ஹா என்பது மதினாவில் இருந்து 73 கி.மீ தூரத்தில் உள்ள இடமாகும். அந்த இடத்தை அடைந்தபோது, செங்கடல் கரையோரத்தில் உள்ள கைக்கா என்ற பள்ளத்தாக்கில் சில இணைவைப்பாளர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் திடீரென்று முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தலாம்; அவர்கள் சார்பாக ஆபத்து உள்ளது என்றும் அன்னாருக்கு செய்தி கிடைத்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் உம்ராவுக்காக இஹ்ராம் அணிந்திராத ஹஸ்ரத் அபூ கதாதா அன்ஸாரி (ரலி) அவர்களை ஸஹாபிகள் உடைய ஒரு குழுவுடன் அங்கு அனுப்பி வைத்தார்கள்.




இந்தப் பயணத்தின் போது சில அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும் குறிப்பு காணப்படுகிறது. பயணத்தில் ஓரிடத்தில் பெருமானார் (ஸல்) அவர்களை சுற்றியும் மக்கள் கூடியிருந்தார்கள். அப்போது அன்னாருக்கு முன்னால் ஒரு தண்ணீர் பாத்திரம் இருந்தது. அதிலிருந்து அன்னார் உளூ செய்து கொண்டிருந்தார்கள். மக்களைப் பார்த்து, என்ன விஷயம்? என்று கேட்டார்கள். ஸஹாபிகள் அன்னாரிடம், தங்களிடத்தில் இந்த பாத்திரத்தில் இருக்கும் நீரைத் தவிர எங்களிடத்தில் எவரிடமும் குடிக்கவோ, உளூ செய்யவோ நீர் இல்லை என்று கூறினார்கள். இதைக் கேட்ட அன்னார் (ஸல்) அந்தப் பாத்திரத்தில் தம் கையை இட்டார்கள். ஸஹாபிகள் அன்னாரிடம், தங்களிடத்தில் இந்தப் பாத்திரத்தில் இருக்கும் நீரைத் தவிர எங்களிடத்தில் எவரிடமும் குடிக்கவோ, உளூ செய்யவோ நீர் இல்லை என்று கூறினார்கள். இதைக் கேட்ட அன்னார் (ஸல்) அந்தப் பாத்திரத்தில் தம் கையை இட்டார்கள். அப்போது அன்னாருடைய விரல்களின் நடுவில் இருந்து நீரூற்றை போன்று தண்ணீர் பொங்கி வர ஆரம்பித்தது. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் அனைவரும் நீரை அருந்தினோம்; உளூ செய்தோம். நாங்கள் எண்ணிக்கையில் ஒரு லட்சம் பேர் இருந்திருந்தாலும், எங்களுக்கு போதுமான அளவு தண்ணீர் கிடைத்திருக்கும். ஆனால், நாங்கள் 1500 பேர் தான் இருந்தோம்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை வரலாற்று நூல்களில் இருந்து எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்:

பயணத்தின் போது எப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் வந்தது என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்த ஒரு பாத்திரத்தில் இருந்த நீரைத் தவிர வேறு எந்த நீரும் எஞ்சியிருக்கவில்லை. எல்லாப் பாத்திரங்களும்; காலியாகி விட்டிருந்தன. அந்த சந்தர்ப்பத்தில் ஸஹாபிகள் சார்பாக தண்ணீர் தட்டுப்பாடு குறித்த முறையீடு வந்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய அந்த பாத்திரத்தின் விளிம்பில் தம் அருளுக்குரிய கையை வைத்து அந்தப் பாத்திரத்தை சாய்த்தவாறு ஸஹாபிகளைப் பார்த்து, இப்பொழுது உங்களுடைய பாத்திரங்களை கொண்டு வாருங்கள்; தண்ணீர் நிரப்பிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்:

அப்போது அன்னாருடைய விரல்களுக்கு உள்ளே இருந்து ஒரு நீரூற்றைப் போன்று தண்ணீர் பீறிட்டு வந்து கொண்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால் அனைவரும் தத்தமது தேவைக்கேற்ப தண்ணீரைப் பிடித்துக் கொண்டார்கள். முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருந்த துன்பம் விலகிக் கொண்டிருந்தது.

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்:

லிக்)கா அதாவது, இறை சந்திப்பு எனும் அந்தஸ்தில் சில சமயங்களில் மனிதன் மூலமாக எவ்வாறான விஷயங்கள் வெளிப்படுகின்றவென்றால், அது மனித ஆற்றல்களுக்கு மேலானதாக தெரிகிறது. அது இறை ஆற்றல்களின் பண்பை தமக்குள் வைத்திருக்கின்றது. பல அற்புதங்களை பெருமானார் (ஸல்) அவர்கள் தனிப்பட்ட ஆற்றலின் மூலமாக காட்டி இருக்கின்றார்கள். அவற்றுடன் எந்த துஆவும் இருக்கவில்லை. பல சமயங்களில், ஒரு குவளையில் குறைவாக இருந்த தண்ணீரில் தம் விரல்களை உள்ளே இட்டதன் காரணமாக அதை எந்த அளவு அதிகமாக்கி விட்டார்கள் என்றால், முழுப் படையினரும் அந்த தண்ணீரை அருந்தினார்கள். ஒட்டகங்களும், குதிரைகளும் அருந்தின. அவ்வாறிருந்தும் அந்த தண்ணீர் தம் கொள்ளளவில் அப்படியே இருந்தது. ஒரு சில ரொட்டிகளின் மீது கை வைத்ததன் காரணமாக பசியோடும், தாகத்தோடும் இருந்த ஆயிரக்கணக்கானவர்கள் அதன் மூலமாக வயிறு நிரம்ப உண்ட பல சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. சில சமயங்களில் குறைவாக இருந்த பாலில் தம் நாவினால் அருளை வழங்கி ஒரு கூட்டத்தின் வயிறை அதன் மூலமாக நிரம்பச் செய்தார்கள். சில சமயங்களில் கசப்பான நீரைக் கொண்டிருந்த கிணறுகளில் தம் உமிழ் நீரை இட்டு அதை மிகவும் இனிப்பான நீராக ஆக்கி இருக்கிறார்கள். சில சமயங்களில் கடும் காயமுற்றவர்கள் மீது தம் கையை வைத்து அவர்களை நலமாக்கி இருக்கின்றார்கள். சில சமயங்களில் போரில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக (ஒருவருடைய) கண் விழிகள் வெளியே வந்திருக்கும். தம் கையுடைய அருள் மூலமாக அதை மீண்டும் சரி செய்து இருக்கிறார்கள். இவ்வாறே இன்னும் பல வேலைகளை தம் ஆற்றிலின் மூலமாக செய்திருக்கிறார்கள். அவற்றுடன் மறைவாக இறை ஆற்றலும் இணைந்திருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடைய அற்புதங்களை பற்றிய குறிப்பில் இவ்விஷயங்களை எடுத்துரைத்திருக்கிறார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் பயணம் குறித்த தகவல் கிடைத்ததும், குறைஷியர்கள் படையை ஆயத்தம் செய்தது மற்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடத்தில் ஆலோசனை செய்ததது ஆகியவை பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கின்றது. முஸ்லிம்கள் போருக்காக புறப்படவில்லை ; மாறாக பைத்துல்லாஹ்வை தரிசிப்பதற்காக வந்து கொண்டிருக்கின்றார்கள் என்று குறைஷியர்களுக்கு தெரிய வந்த உடனயே அவர்கள் முஸ்லிம்களை மக்காவுக்குள் நுழைய விடாமல் தடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். வாளேந்தக் கூடிய ஒவ்வொருவரும் முஸ்லிம்களை தடுப்பதற்காக புறப்பட்டார். போருக்காக முஸ்லிம்கள் வரவில்லை என்று தெரிந்தும் கூட அவர்கள் தம் நட்புக் கோத்திரங்களை உடன் சேர்த்துக் கொண்டு 8000 படை வீரர்களைக் கொண்ட படையை ஆயத்தம் செய்து மக்காவுடைய மேற்கு திசையில் இருந்த பல்தா என்ற பள்ளத்தாக்கில் முகாமிட்டிருந்தார்கள். அத்துடன் காலித் பின் வலீத் 200 படை வீரர்களை கொடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் ஸஹாபிகளின் பாதையை மறிப்பதற்காக உஸ்ஃபானிலிருந்து எட்டு மைல் தொலைவில் இருந்த குராவுல் கமீம் என்ற பள்ளத்தாக்கை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் மிஸ்வர் பின் மக்ரிமா மற்றும் மர்வான் பின் ஹகம் ஆகியோரிடமிருந்து அறிவிக்கப்படுகிறது; உஸ்ஃபான் எனுமிடத்திற்கருகில் அஷ்தாக் எனும் குளத்தை அடைந்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் சார்பாக உளவறிய அனுப்பி வைக்கப்பட்ட நபர் வந்தடைந்தார். அவர் அன்னாரிடம், குறைஷியர்கள் தங்களுக்காக பெரும் படையை ஒன்று திரட்டியுள்ளார்கள். தங்களுக்காக பல்வேறு கோத்திரங்களை ஒன்று கூட்டியுள்ளார்கள். அவர்கள் தங்களுடன் போர் புரிய இருக்கின்றனர். பைத்துல்லாஹ்வை விட்டு தங்களை தடுக்க உள்ளார்கள் என்று கூறினார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், மக்களே, எனக்கு ஆலோசனை கூறுங்கள். எவர்கள் நம்மை பைத்துல்லாஹ்வை விட்டு தடுக்க விரும்புகிறார்களோ நான் அவர்களின் குடும்பத்தின் மீதும், பிள்ளைகளின் மீதும் போர் தொடுக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? என எனக்கு ஆலோசனை கூறுங்கள் என்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, தாங்கள் அல்லாஹ்வின் வீட்டை தரிசிக்க வேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டு வந்துள்ளீர்கள். எவரையும் கொலை செய்ய வேண்டும் என்று தாங்கள் எண்ணம் கொண்டிருக்கவில்லை. எவருடனும் சண்டையிட வேண்டும் என்ற எண்ணமும் இல்லை. ஆகவே தாங்கள் அந்த வீட்டை நோக்கி புறப்படுங்கள். எவர் நம்மை தடுப்பாரோ அவருடன் நாம் போரிடலாம் என்று கூறினார்கள். அதாவது நாம் நம்முடைய வேலையை தொடர வேண்டும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸைத் பின் ஹுஸைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிய விஷயத்தோடு உடன்பட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பிறகு ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! பனீ இஸ்ராயீல் தம் நபியான மூஸா (அலை) அவர்களைப் பார்த்து, நீரும் உமது இறைவனும் சென்று போரிடுங்கள்; நாங்கள் இங்கேயே அமர்ந்திருக்கின்றோம் என்று கூறியதைப் போன்று நாங்கள் தங்களிடம் கூறமாட்டோம். (மாறாக) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, தாங்கள் புறப்படுங்கள்; தாங்களும் தங்களுடைய இறைவனும் போரிடுங்கள்; நாங்கள் தங்களுடன் சேர்ந்து போரிடுவோம் என்றார்கள்.

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமக்கே உரிய பாணியில் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

மக்கத்துவாசிகளுக்கு தெரிய வந்தபோது அவர்கள் படையை திரட்டிக் கொண்டு வந்தனர். உங்களுக்கு இங்கே வருவதற்கு யார் அனுமதி கொடுத்தார்? என்று முஸ்லிம்களிடம் கேட்டார்கள். அதற்கு, முஸ்லிம்கள் நாங்கள் போரிட வரவில்லை. உம்ரா செய்வதற்காக மட்டுமே வந்துள்ளோம். இந்த இடம் உங்களைப் பொறுத்த வரையிலும் அருளுக்குரியது; எங்களைப் பொறுத்த வரையிலும் அருளுக்குரியது.நாங்கள் இதை தரிசிக்க வந்துள்ளோம்; போர் புரிய வரவில்லை என்று கூறினார்கள். அதற்கு மக்காவாசிகளோ தரிசிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார்கள். அதாவது நிராகரிப்பாளர்கள் அதை மறுத்து விட்டார்கள். எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் சண்டை உள்ளது. நீங்கள் மக்கா வந்து கஅபத்துல்லாஹ்வை வலம் வந்து சென்று விட்டால் முழு அரேபியாவிலும் எங்களுக்கு அவமானம் ஏற்பட்டு விடும். உங்களுடைய எதிரி உங்களுடைய வீட்டுக்கு வந்து சென்று விட்டார்கள் என்று கூறுவார்கள். நாங்கள் முழு அரேபியாவுக்கும் அனுமதி கொடுப்போம்; ஆனால் உங்களுக்கு கொடுக்க முடியாது என்று கூறி விட்டார்கள்.

ஏற்கனவே கூறப்பட்டது போன்று காலித் பின் வலீத் 200 வீரர்களைக் கொண்ட படையுடன் பெருமானார் (ஸல்) அவர்களின் குழுவை தடுத்து நிறுத்துவதற்காக அன்னாருக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்ததும், காலித் பின் வலீத் நின்று கொண்டிருந்த பாதையை விட்டு விலகி வேறொரு வழியாக அன்னார் (ஸல்) ஹுதைபியா சென்றடைந்து விட்டார்கள்.

இதைப் பற்றிய விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் சில நாட்கள் பயணம் செய்து மக்காவுக்கு அருகில் இருந்த, வழிப் பாதையில் அமைந்திருந்த அஸ்ஃபான என்ற இடத்தை அடைந்தபோது, அன்னாருடைய உளவாளி திரும்பி வந்து அன்னாரிடம், மக்கத்து குறைஷியர்கள் பெரும் உத்வேகத்தில் உள்ளார்கள்; தங்களை தடுப்பதற்கு உறுதியான எண்ணம் கொண்டுள்ளார்கள்; எந்த அளவுக்கு என்றால், அவர்களில் சிலர் போருக்கான உறுதியான எண்ணம் கொண்டு தங்களுடைய உத்வேகம் மற்றும் ஆவேசத்தை வெளிப்படுத்தும் வகையில் சிறுத்தையின் தோல்களை அணிந்து இருக்கிறார்கள் என்று கூறினார்கள். எவ்வாறு இருப்பினும், முஸ்லிம்களை தடுத்து நிறுத்துவதற்கு எண்ணம் கொண்டுள்ளனர் என்று கூறினார். குறைஷியர்கள் தம்முடைய சில துணிச்சலான வீரர்களைக் கொண்ட ஒரு படைப்பிரிவை காலித் பின் வலீத் தலைமையில் முன்னே அனுப்பி இருக்கிறார்கள் என்பதும் தெரிய வந்தது.

காலித் பின் வலீத் அவர்கள் அப்போது முஸ்லிமாக ஆகி இருக்கவில்லை.

அந்தப் படைப் பிரிவு அப்போது முஸ்லிம்களை நெருங்கி விட்டிருந்தது. அந்தப் படைப் பிரிவில் இக்ரிமா பின் அபூஜஹல் போன்றோரும் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த

செய்தியை கேட்ட உடனேயே மோதலை தவிர்க்கும் நோக்கத்துடன் ஸஹாபிகளிடம், மக்காவின் முக்கியப் பாதைகளை விட்டு வலப்பக்கமாக முன்னேறுமாறு கட்டளையிட்டார்கள். ஆகவே முஸ்லிம்கள் ஒரு கடினமான, சிரமம் மிகுந்த பாதை வழியாக,கடலோரப் பகுதிகள் வழியாக முன்னேற ஆரம்பித்தார்கள். காஃபிர்களுடன் போர் மூள்வதை அன்னார் (ஸல்) விரும்பவில்லை. ஏனெனில், அன்னார் (ஸல்) போர் புரிவதற்காக சென்றிருக்கவில்லை. மாறாக உம்ரா செய்வதற்காக சென்றிருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு தம் இடத்தை சென்றடைந்து விட்டார்கள். முஸ்லிம்கள் பாதையை மாற்றிக் கொண்டு சென்றதைப் பற்றி காலித் பின் வலீத் அவர்களுக்கு ஒருபோதும் தெரியவில்லை. எந்த அளவுக்கு என்றால், இஸ்லாமியப் படையின் புழுதியை அவர்கள் கண்டபோது குறைஷியர்களுக்கு தகவல் கொடுப்பதற்காக விரைந்து சென்றார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபியாவை சென்றடைந்தது குறித்து அறிவிப்புகளில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் மிஸ்வர் பின் மக்ஸமா மற்றும் மர்வான் ஆகியோரிடமிருந்து அறிவிக்கப்படுகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபியாவை சென்றடைந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், குறைஷியர்களுக்கு அருகில் இறங்கக் கூடிய பள்ளத்தாக்கை அன்னார் (ஸல்) சென்றடைந்தார்கள். அப்போது அன்னாருடைய ஒட்டகம் அன்னாரை சுமந்தவாறு அமர்ந்து விட்டது. அதை எழுப்புவதற்காக மக்கள் அதட்ட ஆரம்பித்தார்கள். ஆனால் அது அந்த இடத்திலேயே அமர்ந்திருந்தது. கஸ்வா (எனும்) இந்த ஒட்டகம் பிடிவாதம் பிடிக்கக் கூடியதும் கிடையாது; அது அதனுடைய குணமும் கிடையாது. மாறாக யானைகளை தடுத்து நிறுத்திய தூய இறைவன் அதாவது அல்லாஹ் இதை தடுத்து நிறுத்தியுள்ளான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். என் உயிர் எந்த இறைவனின் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக, அல்லாஹ்வின் புனித(த் தல)ங்களை கண்ணியப்படுத்துவது தொடர்பாக குறைஷிகள் எதை விரும்பினாலும் நான் அவர்களுக்கு அதை கொடுப்பேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பிறகு அன்னார் ஒட்டகத்தை அதட்டியபோது அது எழுந்து நின்றது. குறைஷியர்கள் அல்லாஹ்வின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படாத வகையில் எதை வேண்டினாலும் நான் அதை பூர்த்தி செய்வேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், அன்னார் (ஸல்) ஒட்டகத்தை மீண்டும் ஓட்ட விரும்பிய போது அது எழுந்து நின்றது. அன்னார் (ஸல்) மக்காவாசிகளை நோக்கி செல்லாமல் விலகிச் சென்றார்கள். எந்த அளவுக்கு என்றால், ஹுதைபியாவின் மற்றொரு எல்லைப் பகுதியில் சிறிதளவே தண்ணீர் இருந்த ஒரு பள்ளத்தின் அருகில் முகாமிட்டார்கள்.

இது புகாரியுடைய அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்களின் ஒட்டகம் அங்கு நின்று விட்டது. முன்னால் செல்ல மறுத்து விட்டது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, தங்களுடைய ஒட்டகம் களைத்து விட்டது. இப்போது தாங்கள் வேறோர் ஒட்டகத்தில் அமர்ந்து கொள்ளுங்கள் என்று ஸஹாபிகள் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவ்வாறன்று; இது களைப்படையவில்லை. மாறாக நாம் இங்கு தங்கி விட வேண்டும் என்று இறை நாட்டம் இருப்பதாக தெரிய வருகிறது. ஆகவே மக்காவாசிகள் ஹஜ்ஜுக்காக நமக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்பதற்காக நான் இங்கு தங்கி அவர்களுக்கு எல்லா வகையிலும் கோரிக்கை வைப்பேன். அவர்கள் என்ன நிபந்தனை விதித்தாலும் நான் அதை ஒப்புக் கொள்வேன் என்று கூறினார்கள். அப்போது மக்காவாசிகளுடைய படை மக்காவில் இருந்து வெகு தொலைவில் நின்று கொண்டு முஸ்லிம்களுக்காக காத்துக் கொண்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் நினைத்திருந்தால், அந்தப் படையை எதிர்கொள்ளாமலேயே மக்காவுக்குள் நுழைந்திருக்க முடியும். ஆனால், மக்காவாசிகளின் அனுமதியுடன் பைத்துல்லாஹ்வை சுற்றி வருவதற்கு தாம் முதலில் முயற்சிக்க வேண்டும் என்றும், மக்காவாசிகளே முன்வந்து போரை ஆரம்பித்துப் போருக்காக நிர்ப்பந்திக்கும் பட்சத்தில்தான் போரிட வேண்டும் என்றும் ஏற்கனவே அன்னார் (ஸல்) தீர்மானித்திருந்தார்கள். ஆகவே மக்காவுக்கு செல்லும் வழி திறந்திருந்தும் அன்னார் (ஸல்) ஹுதைபியாவில் முகாமிட்டு விட்டார்கள்.

புகாரியில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஹுதைபியாவில் சிறிதளவே தண்ணீர் இருந்த எந்த தடாகத்திற்கு அருகில் முஸ்லிம்கள் முகாமிட்டிருந்தார்களோ அதிலிருந்து மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் எடுக்க ஆரம்பித்தார்கள். அதிக நேரம் கூட கழிந்திருக்காது. மக்கள் அதனுடைய தண்ணீரை இறைத்து அதை காலி செய்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம் தாகத்தைப் பற்றிய முறையீடு செய்யப்பட்டது. ஹஸ்ரத் நாஜியா பின் அஃஜம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் தண்ணீர் தட்டுப்பாடு குறித்து பெரும் முறையீடு செய்யப்பட்டபோது, அன்னார் (ஸல்) என்னை அழைத்தார்கள். தமது அம்புக் கூட்டிலிருந்து ஓர் அம்பை வெளியே எடுத்து எனக்கு கொடுத்தார்கள். பிறகு ஒரு குவளையில் நீரூற்றினுடைய தண்ணீரை கொண்டு வருமாறு கூறினார்கள். நான் அதை கொண்டு சென்று கொடுத்தேன். அன்னார் (ஸல்) உளூ செய்தார்கள். பிறகு வாய் கொப்பளித்து அதை அந்தக் குவளையில் உமிழ்ந்தார்கள். பிறகு என்னிடம், இந்த குவளையில் உள்ள நீரை வற்றிப் போன நீரூற்றில் ஊற்றி விடுங்கள்; மேலும் அந்த தண்ணீரில் அம்பை நிறுத்தி வையுங்கள் என்று கூறினார்கள். நான் அவ்வாறே செய்தேன். பெருமானார் (ஸல்) அவர்களை உண்மையுடன் அனுப்பி வைத்த இறைவன் மீது ஆணையாக! நான் மிகவும் கஷ்டப்பட்டுதான் அதை விட்டு வெளியே வந்தேன். தண்ணீர் நாலாப் புறமும் என்னை சூழ்ந்து கொண்டது.

அதாவது அந்த தண்ணீரை ஊற்றி அம்பை நிறுத்தி வைத்து விட்டு நான் அங்கே நின்று கொண்டிருந்தபோது திடீரென்று தண்ணீர் மட்டம் உயரத் தொடங்கியது. கிணற்றில் எந்த அளவு தண்ணீர் பீறிட்டு வந்து கொண்டிருந்தது என்றால் கொதிக்கின்ற பாத்திரத்தை போன்று பொங்கிக் கொண்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால், தண்ணீர் மட்டம் உயர்ந்து கொண்டே சென்றது. கரையோரம் வரை அது நிரம்பி விட்டது. மக்கள் அதன் கரையில் நின்று கொண்டு தண்ணீரை நிரப்ப ஆரம்பித்தார்கள். எந்த அளவுக்கு என்றால், கடைசி நபருடைய தாகமும் தீர்ந்து விட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு மழை பெய்ததது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இதுவும் வரலாற்று நூல்களில் இருந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அன்னார் (ரலி) கூறுகிறார்கள்: அந்த இரவிலோ அல்லது அதற்கு நெருக்கமான நேரத்திலோ மழையும் பெய்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழுகைக்காக வருகை தந்த போது, மைதானம் நனைந்திருந்தது.அன்னார் (ஸல்) ஸஹாபிகளை பார்த்து புன்சிரித்தவாறு, இந்த மழையின் போது உங்களுடைய இறைவன் என்ன கூறினான்? என்று நீங்கள் அறிவீர்களா? என்று கேட்டார்கள். ஸஹாபிகள் வழக்கம் போல, இறைவனும், அவனுடைய தூதருமே நன்கு அறிவார்கள் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: இறைவன் என்ன கூறினான் என்றால், என்னுடைய அடியார்களில் சிலர் இந்த (விடியல்) காலையை உண்மையான ஈமானுடன் கண்டார்கள். சிலர் நிராகரிப்பில் விழுந்து தடுமாறி விட்டனர். ஏனெனில், நம் மீது இறை அருளாலும், கருணையாலும் மழை பெய்தது என்று எந்த அடியார் கூறினாரோ அவர் ஈமானின் உண்மையில் நிலைத்திருந்தார். ஆனால், இந்த மழை இன்னின்ன நட்சத்திரங்களின் தாக்கத்தின் விளைவாக பெய்தது என்று எவர் கூறினாரோ அவர் சூரிய, சந்திரன் மீது நம்பிக்கை கொண்டு இறைவனுக்கு மாறு செய்து விட்டார் என்று கூறினார்கள்.

இந்த வழிகாட்டலில் ஏகத்துவம் பற்றி கூறப்பட்டிருக்கின்ற அதேவேளையில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு மற்றோர் விஷயத்தையும் கற்றுக் கொடுத்தார்கள். அது என்னவென்றால், சந்தேகத்திற்கிடமின்றி காரணிகள் மூலமாகவே இறைவன் இந்த பிரபஞ்சத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றான். அதற்காக பல்வேறு வகையான காரணிகளை அவன் நிர்ணயித்துள்ளான். மழை பெய்வதற்கு நட்சத்திரங்களின் தாக்கம் இருப்பதை நாம் மறுக்க முடியாதுதான். ஆனால், உண்மையான ஏகத்துவம் என்பது இடையில் காரணிகள் இருந்தாலும் மனிதனுடைய பார்வை மறைவிலும் மறைவான இறைவனை விட்டு ஒருபோதும் கவனமற்று இருக்கக் கூடாது. அல்லாஹ் காரணிகளை கொடுத்துள்ளான்தான். ஆனால், அல்லாஹ்வின் கட்டளைக்கேற்பவே அந்த காரணிகளும் வேலை செய்து கொண்டிருக்கின்றன. அவனே இந்த அனைத்து காரணிகளையும் படைத்திருக்கின்றான். அவனே இந்த பிரபஞ்சத்தில் காரணிகள் உருவாக காரணமாகவும் உள்ளான். அவன் இன்றி இந்த வெளிப்படையான காரணிகள் இறந்து போன ஒரு பூச்சியே அன்றி வேறொன்றும் கிடையாது.

பெருமானார் (ஸல்) அவர்களுக்காக அம்ர் பின் ஸாலிம் மற்றும் புஸர் பின் ஸுஃப்யான் ஆகியோர் அன்பளிப்பு கொண்டு வந்தது பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கின்றது. (அதைக் குறித்து) எழுதப்பட்டுள்ளதாவது. அம்ர் பின் ஸாலிம் மற்றும் புஸர் பின் ஸுஃப்யான் ஆகியோர் குஸாஆ கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக

இருந்தார்கள். அவர்கள் ஹுதைபியாவின் போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஆடுகளையும், ஒட்டகங்களையும் அன்பளிப்பாக கொடுத்தார்கள். அம்ர் பின் ஸாலிம் அவர்கள் ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களுக்கும் ஒட்டகத்தை அன்பளிப்பாக கொடுத்தார். ஹஸ்ரத் ஸஅது அவர்கள் அம்ர் பின் ஸாலிம்-ன் நண்பராக இருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் அந்த அன்பளிப்பை எடுத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் சென்று அம்ர் பின் ஸாலிம் தமக்காக இந்த ஒட்டகத்தை அன்பளிப்பாக கொடுத்ததாக கூறிய போது, பெருமானார் (ஸல்) அவர்கள், அம்ர் நமக்காகவும் அன்பளிப்பு கொடுத்துள்ளார் என்று கூறி , அம்ர் உடைய செல்வத்தில் அல்லாஹ் பரக்கத்தை வழங்குவானாக என்றார்கள். அந்த ஒட்டகங்களை அறுத்து அதை ஸஹாபிகளிடத்தில் விநியோகம் செய்யுமாறும், ஆடுகளை பங்கிட்டு கொடுக்குமாறும் கட்டளையிட்டார்கள்.

ஆடுகள் அப்படியே விநியோகம் செய்யப்பட்டன.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பங்கில் தம்மையும் சேர்த்துக் கொண்டார்கள். மற்றவர்களுக்காக ஒட்டக இறைச்சி அனுப்பி வைக்கப்பட்டது போன்று ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அதேபோன்று பெருமானார் (ஸல்) அவர்கள் தம் ஆட்டு இறைச்சியிலும் கொஞ்சம் ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். அன்பளிப்பு கொண்டு வந்தவருக்கு அன்பளிப்பு கொடுப்பதற்காக துணியை கொடுக்குமாறும் அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள். அன்னார் (ஸல்) தமக்கு கிடைத்த அனைத்து அன்பளிப்புகளையும் ஓரிடத்தில் ஒன்று சேர்த்து அனைத்து ஸஹாபிகளுக்கும் அதை பங்கிட்டுக் கொடுத்தார்கள்.

இந்த குறிப்பு மேற்கொண்டும் உள்ளது. ஹுதைபியா தொடர்பான விபரங்கள் இன்னும் உள்ளன. ஹுதைபியா சமாதான உடன்படிக்கை எப்படி ஏற்பட்டது? என்ன நிகழ்ந்தது? என்பன போன்ற மற்ற விஷயங்கள் இன்ஷாஅல்லாஹ் இனி வரக் கூடிய காலத்தில் எடுத்து கூறப்படும்.

இப்போது நான் சில மர்ஹூம்களை பற்றிய நற்குறிப்பையும் எடுத்துரைப்பேன். தொழுகைக்குப் பிறகு ஜனாஸாவும் தொழ வைப்பேன்.

முதல் நற்குறிப்பு, அன்பிற்குரிய ஷஹர்யார் ராக்கின் அவர்களைப் பற்றியதாகும். இவர் பங்களாதேஷைச் சார்ந்த முஹம்மது அப்துல்லாஹ் வஹ்ஹாப் ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்.

இந்த சம்பவம் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது: ஆகஸ்ட் 5-ம் தேதி அரசாங்கம் கவிழ்ந்ததற்கு பிறகு பங்களாதேஷில் கடந்த நாட்களில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அரசாங்கம் கவிழ்ந்த பிறகு நாட்டில் பிரிவினைவாதம் பரவி விட்டது. அஹ்மதிய்யத்தின் எதிரிகளும் இதிலிருந்து பயனடைந்தவாறு அஹ்மது நகர் ஜமாஅத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். அங்கு முன்பும் கூட தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. எதிரிகள் அஹ்மதிகளின் வீடுகளை எரித்துக் கொண்டே சென்றனர். பள்ளிவாசலில் நெருப்பு மூட்டிய பிறகு ஜாமிஆ மற்றும் மாநாடு நடக்கும் இடத்தை நோக்கி அவர்கள் முன்னேறினர். ஜாமிஆவில் நுழைவதில் அவர்கள் வெற்றி பெற முடியவில்லைதான். ஆனால், மாநாடு நடக்கும் இடத்தின் பின்புறமாக வந்து அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காதிம்களை சுற்றி வளைத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டே சென்றனர். அப்போது அன்பர் ஷஹர்யார் அவர்களின் தலையில் கடுமையான காயம் ஏற்பட்டது அதன் காரணமாக மூன்று மாதங்களாக சிகிச்சையில் இருந்தார். இறுதியில் நவம்பர் 8-ம் தேதி 16 வயதில் அவர் மரணமடைந்து விட்டார்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவ்வாறு இவர் ஷஹாதத் எனும் அந்தஸ்தை அடைந்து விட்டார்.

அன்பர் ஷஹர்யார் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்திருந்தார். பின் விட்டுச் சென்றவர்களுள், பெற்றோர், பாட்டனார், பாட்டி மற்றும் ஒரு சகோதரியும், இரு சகோதரர்களும் இருக்கின்றனர். மர்ஹூம் அவர்களின் குடும்பத்தில் அவர்களின் முப்பாட்டனார் ஹஸ்ரத் முன்ஷீ சிராஜுல் இஸ்லாம் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அன்னார் அல்லாமா ஸில்லுர் ரஹ்மான் ஸாஹிப் அவர்கள் மூலமாக குடும்பத்தின் அநேக நபர்களுடன் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். மர்ஹூம் அவர்கள் சுயமே ஜமாஅத் பணிகளில் பங்கெடுக்க கூடியவர்களாக இருந்தார்கள். அஹ்மத் நகருடைய அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் செயற்குழுவில் செகரட்டரி மால் ஆக தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் தாயார் எழுதுகிறார்கள்: அவர்களின் மகன் ஆரம்பகாலத்திலிருந்தே தொழுகை மற்றும் இறை வணக்கங்களை பேணக் கூடியவராகவும், ஜமாஅத் பணிகளில் அனைவரையும் விட அதிக ஆர்வம் கொண்டவராகவும் இருந்தார். எந்த அளவுக்கு என்றால், படிப்பை சுட்டிக் காட்டி ஜமாஅத் பணிகளில் சிலவற்றில் மட்டுமே பங்கெடுக்க வேண்டும் என்று கூறினால் கோபப்பட்டு விடுவார். அஹ்மத் நகரில் ஏதேனும் இஜ்திமா அல்லது மாநாடு நடக்கும்போதெல்லாம் அவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாரையும் விட முதலில் வீட்டை விட்டு புறப்பட்டு அங்கு சென்றடைந்து விடுவார்.

தாயார் கூறுகிறார்: வீட்டில் இளைய மகனாக இருக்கின்ற காரணத்தினால் வீட்டுப் பணிகளிலும் எனக்கு உதவி செய்வார். கிச்சனிலும், உணவு சமைத்தலிலும் பெரும் உதவி செய்வார்.

இந்த சிறுவன் மிகவும் ஷோஸியல் ஆக (பழகக் கூடியவராக) இருந்தார். எந்தவோர் அந்நியருடனும் வெகு விரைவில் பழகி விடுவார்.

தாயார் கூறுகிறார்: இவரும் தன்னுடைய அண்ணனைப் போலவே ஜாமிஆவில் இணைவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

தாயார் இன்னொரு விஷயத்தையும் எழுதியுள்ளார்: அது என்னவென்றால், முன்னரே அவர்களுக்கு எப்படிப்பட்ட கனவுகள் வந்தன என்றால், அன்பர் ஷஹர்யாருடைய ஷஹாதத்தைக் குறித்து முன்பே தகவல் கிடைத்திருந்தது.

அஹ்மத் நகருடைய குத்தாமுல் அஹ்மதிய்யா காயித் நஜ்முஸ் ஸாகிப் கூறுகிறார்:

கடந்த 2023-ம் ஆண்டு மார்ச்-ல் மாநாடு நடந்து கொண்டிருந்த போது, நடத்தப்பட்ட தாக்குதலில் இன்ஜினியர் ஸாஹித் ஹுஸைன் ஸாஹிப் அவர்கள் ஷஹீதாகி இருந்தார்கள்.

நான் அவர்களுக்கு இங்கு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைத்திருந்தேன். குத்பாவிலும் அவர்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்திருந்தேன்.

காயித் ஸாஹிப் கூறுகிறார்: நாங்கள் அனைவரும் டியூட்டியில் இருந்த போது, காலை உணவு உண்டவாறு குத்பாவை கேட்டுக் கொண்டிருந்தோம். அப்போது, அன்பர் ஷஹர்யார் அவர்கள், இன்று நான் ஷஹீத் ஆகி இருந்தால் என்னைப் பற்றியும் கூறப்பட்டு கொண்டிருக்கும் என்று கூறினார்கள்.

(தாக்குதல் நடந்தது) பற்றி இவ்வாறு எழுதுகிறார்கள்: தாக்குதல் நடத்தியவர்கள் ஆகஸ்ட் 5-ம் தேதி திடீரென்று தாக்குதல் நடத்தினார்கள். முன்பு நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பிறகு இந்த முறை தாக்குதல் நடத்திய போது ஜாமிஆவை பாதுகாப்பதற்காக பெரும் எண்ணிக்கையில் மக்கள் இருந்தார்கள். மாநாடு நடக்கும் இடத்தை பாதுகாப்பதற்காக பாதையின் இருபுறங்களிலும் 15 காதிம்கள் மட்டுமே டியூட்டியில் நின்று கொண்டிருந்தார்கள். மர்ஹூம் ஷஹர்யார் அவர்களும் அங்குதான் அவர்களுடன் இருந்தார்கள். மிகவும் துணிச்சலுடன் காவல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். பாதுகாப்பு நடவடிக்கைகளில் காயித் ஸாஹிப் அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள்.

தாக்குதல் நடத்தியவர்கள் திடீரென் கேட்டை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து விட்டார்கள். உள்ளே நுழைந்த உடனேயே தாக்குதல் நடத்த ஆரம்பித்து விட்டார்கள். கட்டைகளைக் கொண்டு தாக்க ஆரம்பித்தார்கள் ; காயப்படுத்த ஆரம்பித்தார்கள். பல பேர் காயமடைந்தார்கள். அனைவரையும் விட அதிகமாக மர்ஹூம் அவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவர்களுக்கு அப்போது எந்த அளவு அதிகமாக காயங்கள் ஏற்பட்டிருந்தன என்றால், தலையில் அதிக காயங்கள் இருந்தன. உடலின் கீழ்ப் பகுதி முற்றிலும் உணர்வற்று போய் விட்டது. அதை மர்ஹூம் அவர்கள் அங்கேயே வெளிப்படுத்தியிருந்தார்கள். அதற்கு கொஞ்ச நேரத்திற்கு பிறகு ராணுவ வாகனம் வந்தது. ராணுவம் வந்ததன் காரணமாக தாக்குதல் நடத்தியவர்கள் காயமடைந்த அஹ்மதிகளை விட்டு விட்டு அங்கிருந்து ஓடி விட்டார்கள்.

காயித் ஸாஹிப் எழுதுகிறார்: எல்லா நேரமும் டியூட்டி மற்றும் தொண்டுகளுக்கு ஆயத்தமாக இருப்பார்கள். பள்ளிவாசலை சுத்தம் செய்தல் மற்றும் வகாரே அமல் ஆகியவற்றில் தாமும் பங்கெடுத்து வந்தார்கள்; மற்றவர்களை பங்கெடுக்கச் செய்தார்கள். ஃபஜர் மற்றும் தஹஜ்ஜுத் தொழுகைகளில் மக்களை எழுப்பக் கூடிய கடமையை நிறைவேற்றி வந்தார்கள்.

பங்களாதேஷ் ஜாமிஆவின் மாணவரான ஸஹீர் ஸாஹிப் என்பவர் கூறுகிறார்: மர்ஹூம் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டு கொண்டிருக்கும்போது, அப்போது அப்பகுதியில் என்னுடைய டியூட்டி

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இருந்தது. அஹ்மத் நகரைச் சார்ந்த ஒரு காதிமிடம், மர்ஹூம் அவர்களைக் குறித்து நான் விசாரித்துக் கொண்டிருந்தேன். தாங்கள் பெரும்பாலும் மர்ஹூமுடன் இருந்துள்ளீர்கள்; விளையாடியும் உள்ளீர்கள்; மற்றவர்களை விட அவர்களை மிகவும் மேம்படுத்தி கட்டக் கூடிய தனிச்சிறப்பு மர்ஹூமிடம் என்ன இருந்தது? என்று நான் கேட்டபோது, அவர் கூறினார்:

2023-ம் ஆண்டு மாநாட்டின் போது, ஷஹீது ஆன ஸாஹித் ஹூஸைன் ஸாஹிப் அவர்களைக் குறித்து கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது. நாங்கள் அனைவரும் அதை பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று ஷஹர்யார் ஸாஹிப் அவர்கள் ஸாஹித் அண்ணனைப் போன்று நானும் ஷஹீத் ஆகி இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். என்னுடைய புகைப்படமும் இங்கு இருந்திருக்குமே. என்னைப் பற்றிய நற்குறிப்பும் குத்பாவில் கூறப்பட்டிருக்குமே என்று கூறினார். அதைக் கேட்டு நாங்கள் அனைவரும் வியப்படைந்து விட்டோம்.

அல்லாஹ் அவருடைய இந்த விருப்பத்தையும் நிறைவேற்றி விட்டான்.

மர்ஹூம் அவர்களின் சிற்றன்னை ஸைனத் ஃபவ்ஸியா அவர்கள் கூறுகிறார்கள்: தம் சகோதரர்களில் எல்லோரையும் விட சிறியவராக இருந்தார். எல்லோர் பேச்சையும் கேட்பார். எல்லாருடைய வேலையும் செய்து கொடுப்பார். தாக்குதல் நடத்தப்பட்ட நாள் வீட்டை விட்டு புறப்பட்டபோது, பள்ளிவாசலை பாதுகாக்க வேண்டும் ; வெற்றி பெறவில்லை என்றால் ஷஹீத் ஆகிவிடுவேன் என்று கூறிக் கொண்டிருந்தார்.

எவ்வாறு இருப்பினும், ஷஹீத் மர்ஹூம் அவர்கள் தியாகத்தில் பெரியவர்களுக்கும் ஒரு முன்னுதாரணத்தை நிலைநாட்டியிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. பெற்றோர்கள் மற்றும் பின்விட்டுச் சென்றவர்களுக்கு அல்லாஹ் பொறுமையையும், துணிவையும் வழங்குவானாக.

இரண்டாவது நற்குறிப்பு, நம்முடைய பழைய அரேபிய நண்பர் அப்துல்லாஹ் அஸது ஓதே ஸாஹிப் அவர்களைப் பற்றியதாகும். கடந்த நாட்களில் 94 வயதில் மரணமடைந்து இருக்கின்றார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன்.

இவர்கள் எப்படிப்பட்ட வீட்டில் வளர்ந்தார்கள் என்றால், கபாபீரில் அஹ்மதி முபல்லிக்மார்களுடன் எல்லோரையும் விட அதிக நேசமும் பற்றும் கொண்ட வீடாக அது இருந்தது. அந்த முபல்லிஃக்குகளுடைய களங்கமற்ற முயற்சிகள் மற்றும் துஆவின் மூலமாக - அனைத்தையும் விட அதிகமாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் துஆக்களின் விளைவாக கபாபீர் எப்பொழுதும் அல்லாஹ்வின் பாதுகாப்பு மற்றும் அடைக்கலத்தில் இருந்துள்ளது. குறிப்பாக பாலஸ்தீன் போர் மற்றும் 1948-இல் பெரிய அளவு புலம்பெயர்தல் ஏற்பட்ட காலகட்டங்களில் அல்லாஹ் கபாபீர்- ஐ பாதுகாத்தான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் இருந்து தம் இறுதி காலம் வரை மர்ஹூம் அவர்கள் அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்களுடன் கடிதத் தொடர்பு, கட்டுப்படுதல், களங்கமற்றத் தன்மை மற்றும் உறுதியான தொடர்பை கொண்டிருந்தார்கள். ஆரம்ப காலத்தில் வஸிய்யத் செய்தவர்களை சார்ந்தவர்களாக இருந்தார்கள். 1924-ல் ஹஸ்ரத் மௌலானா அபுல் அதா ஸாஹிப் ஜலந்தரி அவர்கள் அஹ்மதிய்யா ஸ்கூலை திறந்தபோது அதில் மர்ஹூம் அவர்கள் ஆரம்பக் கல்வி கற்றார்கள். பிறகு 1948-ல் இங்கிலீஷ் ஸ்கூலில் சேர்ந்தார்கள். அங்கும் மெட்ரிக் முடித்தார்கள். பிறகு அல் குத்ஸ் யூனிவர்ஸிட்டியில் எம்.ஏ உடைய டிகிரியில் நன்கு தேர்ச்சி பெற்றார்கள். 20 வருடங்கள் வரை தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகத்தில் பணியாற்றி இருக்கின்றார்கள். அதற்குப் பிறகு அரசாங்க ஆடிட் துறையில் ஒரு பெரும் பொறுப்பில் பணியாற்ற கூடிய நல்வாய்ப்பையும் பெற்றுள்ளார்கள். 1950ல் அங்கிருந்து ஓய்வு பெற்றார்கள். அதற்குப் பிறகு மார்க்க விவகாரம் தொடர்பான அமைச்சகத்தில் இஸ்லாமிய விவகாரங்களுடைய தலைவராக முன்மொழியப்பட்டார்கள். அஹ்மதி என்ற காரணத்திற்காக சில இஸ்லாமிய நாடுகள் அன்னாரை எதிர்த்தன. ஆகவே அன்னார் தம்முடைய கொள்கை பிடிப்பு மற்றும் அஹ்மதிய்யத்திற்கு கட்டுப்பட்டவாறு அதை விட்டு விலகி விட்டார்கள்.

1945-ல் ஹஸ்ரத் சவ்த்ரி ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்கள் ஐ.நா சபையுடைய பிரதிநிதியாக பாலஸ்தீனத்திற்கு சுற்றுப் பயணம் செய்தார்கள். அந்த காலகட்டத்தில் அவர்கள் மிஷன் ஹவுஸூக்கும் வந்திருந்தார்கள். ஷரீஃப் ஓதே ஸாஹிப் அவர்களின் பாட்டனாரான மர்ஹூம் அபூ ஸாலிஹ் முஹம்மத் ஸாலிஹ் ஓதே ஸாஹிப் அவர்களின் வீட்டில் தங்கி இருந்தார்கள். அப்போது மர்ஹூம் அப்துல்லாஹ் அஸது ஸாஹிப் அவர்கள் 15 வயது உடையவராக இருந்தார்கள். அவர்கள் தினந்தோறும் சவ்த்ரி ஸாஹிப் அவர்களுக்கு தொண்டாற்றுவதற்காக ஆஜராகி அவர்களுக்கு செய்தித்தாள்கள் கொண்டு வந்து கொடுத்தல் போன்ற பணிகளை செய்து கொண்டிருப்பார்கள்.

மர்ஹூம் அவர்கள் எப்போதும் முபல்லிஃக்மார்களுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்துள்ளார்கள். ஜெனரல் செகரட்டரி, செகரட்டரி தஃலீம் வ தர்பிய்யத், செகரட்டரி உமூரே காரிஜா, சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், செகரட்டரி சத் சாலா ஜூபிலி ஆகிய பொறுப்புகளில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறையும் பெற்றுள்ளார்கள்.

கபாபீரில் மதரஸா அஹ்மதிய்யா உடைய புதிய கட்டுமான பணி எனும் மாபெரும் திட்டத்தில் ஜமாஅத்தின் முபல்லிஃக் ஜலாலுத்தீன் கமர் ஸாஹிப் மர்ஹூம் அவர்களுக்கு உதவியாளராக இருந்துள்ளார்கள். மர்ஹூம் மிகப் பெரும் எழுத்தாளராக இருந்துள்ளார்கள். அரபி இதழான அல் புஷ்ராவில் 70 ஆண்டுகள் வரை பல்வேறு கட்டுரைகளை எழுதி இருக்கிறார்கள். சூரா கஹ்ஃப் உடைய விளக்க உரையை ஆங்கிலத்தில் இருந்து அரபியில் மொழியாக்கமும் செய்துள்ளார்கள். அது ஜமாஅத்தின் முபல்லிஃக் மதிப்பிற்குரிய ஃபஸ்லே இலாஹி பஷீர் ஸாஹிப் அவர்களின் காலகட்டத்தில் வெளியானது.

அரபு நாடுகளில் ஜமாஅத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்யப்பட்டு கொண்டிருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தும் பஹாயிய்யத்தும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்று பிரச்சாரம் செய்யப்பட்டது.

அஹ்திய்யா ஜமாஅத்தை பஹாயிய்யத்துடன் இணைத்து விட்டிருந்தார்கள். மர்ஹூம் அப்துல்லாஹ் அஸது ஸாஹிப் அவர்கள் அதற்கு தக்க பதிலடி கொடுத்தவாறு அரேபிய மொழியில் அல் முஆமிரத்துல் குப்ரா என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதினார்கள்.

அதேபோன்று கபாபீருடைய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு தொடர்பாக அல் கபாபீர் பலதீ என்ற தலைப்பில் நூலும் எழுதி இருக்கிறார்கள்.

மிகவும் களங்கமற்ற மனிதராகவும், அஹ்திய்யத்திற்காக தன்மானம் கொண்டவராகவும், அஹ்மதிய்யா ஜமாஅத்தை குறித்து ஒவ்வொரு விஷயத்திலும் பெருமை கொள்ளக் கூடியவராகவும், ஜமாஅத்தின் உண்மையான தொண்டராகவும் திகழ்ந்துள்ளார்கள். அன்னார் பார்லிமென்ட் உடைய உறுப்பினராகவும் முன்மொழியப்பட்டிருந்தார்கள். ஆனால், அரசியலுக்கு என்று தனி கொள்கைகள் உள்ளன. என்னுடைய கொள்கை அஹ்மதிய்யத்தாகும் என்று கூறி அதை மறுத்து விட்டார்கள்.

மர்ஹூமுடைய மகன் காலித் அப்துல்லாஹ் கூறுகிறார்: சில சமயங்களில் எனது தந்தை ஜமாஅத் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். சேர்ந்து தேநீர் அருந்தவோ அல்லது வெளியே எங்கேயாவது செல்வதற்கோ என் தந்தையை என் தாயார் அழைக்கும் போது, என்னிடத்தில் இப்போது ஜமாஅத்துடைய முக்கிய பணிகள் உள்ளன ; அதை முடித்த பிறகுதான் மற்ற விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துவேன். முன்னுரிமை ஜமாஅத் பணிகளுக்கே என்று பதிலளித்து விடுவார்கள்.

பின்விட்டு சென்றவர்களுள் 3 மகன்களும் 3 மகள்களும் 14 பேரப் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவர்களின் சந்ததிகளுக்கும் அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றி செல்லக் கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக.

நான் ஏற்கனவே கூறியது போன்று தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன்.

தமிழாக்கம்
மவ்லவி
A.P.A .தாரிக் அஹ்மது

* * * * * * *

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

## திருக்குர்ஆனில் உலக அமைதிக்கான போதனைகள்-
## குறிப்பாக நீதியை நிலைநாட்டுவது குறித்த போதனைகள்:

(எழுத்து: ஜாவீத் அஹ்மத் லோன் ஸாஹிப், நாஸிர் தீவான், காதியான்)

கண்ணியத்திற்குரிய வாசகர்களே! எந்தவொரு சமூகத்திலும் உலகியல் உயர்வு மற்றும் நற்பண்புகள் உறுதியடைவதற்கான அடிப்படை உண்மையான நீதி நிலைநாட்டப்படுவதைக் கொண்டே அமையும் என்பதை நாம் அறிவோம். அமைதி நிலைநாட்டப்பட்டால் தான் பொதுமக்களிடம் பாதுகாப்பு உணர்வும் நிலைபெற்றிருக்கும். மேலும், அவர்கள் கவனத்துடன் ஒவ்வொரு களத்திலும் முன்னேற்றத்தையும் வெளிப்படுத்துவார்கள்.

அமைதி நிலைபெற்றால் தான் வாழ்வாதாரம் மற்றும் வியாபாரத்தின் சக்கரம் எளிதாக நகர இயலும். ஆராய்ச்சியின் புதிய பாதைகளும் அமைதி நிலைபெறுவதைக் கொண்டே பிணைந்துள்ளது. புதிய தலைமுறைகளின் அறிவு சார்ந்த வளர்ச்சியின் முன்னேற்றத்தையும் அமைதி நிறைந்த சமூகத்தால் தான் கொடுக்க இயலும். அமைதியற்ற சமூகம் வாழ்வாதாரம் மட்டுமல்லாது குடும்ப மற்றும் நல்லொழுக்க ரீதியாகவும் வீணாகிவிடுகின்றன. இன்னும்கூறப்போனால், ஆன்மிக வீழ்ச்சியிலும் தனக்கு நிகர் தானே என்ற விளைவுக்குள்ளாகின்றது. எனவே நமது சுற்றுச் சூழலில் ஒவ்வொரு மட்டத்திலும் குழப்பங்களை அகற்றுவதற்கும் உண்மையான அமைதியை நிலைநாட்டுவதற்கும் ஒவ்வொரு சாத்தியமான முயற்சியும் செய்தாக வேண்டும் என்பது மிகவும் அவசியம் ஆகும்.

உலகம் இன்று எவ்வாறான நீதியையும், நியாயத்தையும் தேடுகின்றதோ அது எவ்வாறு கிடைக்கும்? இது ஒரு முக்கியமான மற்றும் கடினமான கேள்வியாகும். இதற்கான எளிய பதில் என்னவென்றால், எவ்வாறு ஒரு பசியுடையவரின் பசி ரொட்டி அல்லது சாப்பாடு என கூறிக் கொண்டிருப்பதால் மட்டும் நீங்கி விடாதோ அதேபோன்று நீதி குறித்த வெற்று முழக்கங்களாலும், ஐ.நா சபை அலுவலகங்களை அமைப்பதைக் கொண்டு மட்டுமே நீதியை நிலைநாட்டி விட முடியாது. ஆனால், பாராபட்சமின்றி நீதி மற்றும் நியாயம் பற்றிய சட்டத்திட்டங்களும், அவற்றை செயல்படுத்துவதற்கான உறுதி வாய்ந்த திட்டங்களின் விளைவால் மட்டுமே உலக அளவில் அமைதி நிலைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இதற்கான மகத்தான முன்மாதிரிகளை இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்பு ஹஸ்ரத் மாநபி (ஸல்) அவர்கள் உலகின் முன் வைத்தார்கள். இறை நியதிக்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டில் பிறந்தார்கள். அங்கு எல்லா வகையான அநியாயங்களும், கொடுமைகளும், அநீதிகளும் நிகழ்ந்து வந்தன. அன்னார் (ஸல்) அக்கிரமங்களும், கொடுமைகளும் நிரம்பியிருந்த இந்த அரபுத் தீவை நீதி-நேர்மையின் பிறப்பிடமாக்கி உலகின் முன் இஸ்லாமிய ஆட்சியின் ஓர் அழகிய முன்மாதிரியை முன் வைத்தார்கள்.

இதில் ஒருபுறம் அநீதி இழைக்கப்பட்ட பெண்களை கொடுமைகளிலிருந்து விடுவித்து இருக்கும் அதேவேளையில் மறுபுறம் அடிமைகளின் உரிமைகளை கிடைக்கச் செய்ததும் அடங்கும். நீதியின் துவக்கத்தை குடும்பத்தின் ஆரம்ப மட்டத்திலிருந்து செய்தார்கள். அதன் பின் வட்டாரம், நகரம், நாடு மற்றும் உலக அளவில் நீதியை நிலைநாட்டிக் காண்பித்தார்கள்.

குடும்ப அளவில் அன்னார் (ஸல்) பெற்றோர், குழந்தைகள், உறவினர்கள், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், அண்டை அயலார் ஆகியோரின் உரிமையை நிலைநாட்டிய அதேவேளையில் சமூகத்தில் நிற, இன, மத பேதங்களையும் வேற்றுமைகளையும் அகற்றி குடும்பம், வாழ்வாதாரம், மார்க்கம் என ஒவ்வொரு கோணத்திலும் நீதி, நேர்மையை நிலைநாட்டிக் காண்பித்தார்கள். நீதியை பரப்பிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு அறிவித்தார்கள்:

أُمِرْتُ لِاَعْدِلَ بَيْنَكُمُ

(அஷ்ஷூரா: 16)

பொருள்: மக்களே! நான் உங்கள் மத்தியில் நீதியை நிலைநாட்டவே அனுப்பப்பட்டுள்ளேன்.

உலக அமைதிக்காக மிக முக்கியமான மற்றும் அவசியமான கட்டளையாக அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ
وَاِيْتَآئِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ ۚ
يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ

(அந்நஹ்ல்: 91)

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் நீதி, கருணை மற்றும் உறவினர்களுக்கு (கொடுப்பதைப் போல)க் கொடுக்கவும் கட்டளை பிறப்பித்துள்ளான். மேலும், வெட்கக்கேடு மற்றும் விரும்பத்தகாத விஷயங்கள், கிளர்ச்சி செய்தலை தடுக்கின்றான். நீங்கள் படிப்பினை பெறுவதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றான்.

எனவே இஸ்லாம் எவ்வாறான மார்க்கம் எனில் இதனை அல்லாஹ் உலகிலுள்ள எல்லப் படைப்பினத்திடலும் நீதி, நேர்மையுடன் செயல்படுவதற்காக தோற்றிவித்துள்ளான். அல்லாஹ் திருக்குர்ஆனில் குடும்பம், வாழ்வாதாரம், மார்க்கம் என ஒவ்வொரு கோணத்திலும் மற்றும் ஒவ்வொரு மட்டத்திலும் நீதியை நிலைநாட்டும் அடிப்படையை கூறியுள்ளான்.

**முதல் அடிப்படை**: மனிதனின் அடிப்படை உரிமைகள் சார்ந்ததாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

.

كَتَبْنَا عَلٰى بَنِيْٓ اِسْرَآءِيْلَ اَنَّهٗ مَنْ قَتَلَ نَفْسًا بِغَيْرِ نَفْسٍ اَوْ فَسَادٍ فِى
الْاَرْضِ فَكَاَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِيْعًا ؕ وَمَنْ اَحْيَاهَا فَكَاَنَّمَآ اَحْيَا النَّاسَ جَمِيْعًا ؕ

பொருள்: பிறரை கொல்லாத ஒருவரை எவர் கொல்கின்றாரோ அல்லது பூமியில் குழப்பம் விளைவிக்கின்றாரோ அவர் முழு மனித குலத்தையும் கொன்றவரைப் போல ஆவார். மேலும், எவர் அவரை உயிருடன் வைப்பாரோ அவர் முழு மனித குலத்தையும் உயிர்பித்தவரைப் போல ஆவார்.(அல்மாயிதா: 33)

இந்த வசனத்தின் ஒளியில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே உலகில் அமைதியை நிலைநாட்ட ஒவ்வொரு மட்டத்திலும், உலகின் ஒவ்வொரு நாட்டிலும் நீதியின் சரியான தரத்தை நிலைநாட்ட வேண்டும் என்பது அவசியமாகும். ஓர் அப்பாவி மனிதனை கொல்வது முழு மனித குலத்தையும் கொல்வதற்கு ஒப்பானதாகும் என திருக்குர்ஆன் எடுத்துரைக்கின்றது. எனவே நான் ஒரு முஸ்லிம் என்கிற அடிப்படையில் மீண்டும் ஒருமுறை இந்த விஷயத்தை விளக்க விரும்புகின்றேன். இஸ்லாம் எந்தவொரு தன்மையிலும், வடிவத்திலும் அல்லது விதத்திலும் செய்யப்படும் அநீதி மற்றும் கொடுமைக்கு ஒருபோதும் அனுமதி வழங்கவில்லை. இஸ்லாத்தின் இந்தக் கட்டளை முற்றிலும் ஐயமற்றதாகும்.

மேலும் இதில் எந்தவொரு விதிவிலக்கும் இல்லை. திருக்குர்ஆன் இது பற்றி மேலும் கூறுகிறது: உங்களை எதிர்க்கக் கூடிய எந்தவொரு நாடோ அல்லது சமுதாயமோ, அவர்களுடைய விவகாரத்திலும் முழுமையான நீதி, நேர்மையை கையாளுங்கள். அவர்களுடனான பகைமை மற்றும், வெறுப்பின் காரணத்தாலும் அவர்களை பழிவாங்குவதற்கு நீங்கள் அநீதியின் பக்கம் சென்றுவிடக் கூடாது. (எனவும் திருக்குர்ஆன் கூறுகிறது).

முக்கிய வழிகாட்டல் என்னவெனில், பிறரின் செல்வங்கள், வசதி வாய்ப்புகளின் பக்கம் பொறாமை மற்றும் பேராசையின் பார்வையுடன் பார்க்காதீர்கள். நான் சில கட்டளைகளையே உங்கள் முன் வைத்துள்ளேன். எனினும் இவை மிக முக்கியமானதாகும். ஏனெனில், இவையே சமூகத்திலும், உலகிலும் அமைதி மற்றும், நீதி நிலைபெறுவதற்கு அடிப்படை காரணியாகின்றன.

உலகம் இந்த முக்கிய விவகாரங்களின் பக்கம் கவனம் செலுத்த நான் துஆ செய்கின்றேன். அப்போது தான் எந்த அழிவின் பக்கம் கொடுமை செய்பவர்களும், பொய்யர்களும் நம்மை கொண்டு செல்கின்றனரோ அதிலிருந்து நாம் பாதுகாக்கப்படுவோம். (ஒன்பதாவது லண்டன் அமைதி மாநாட்டில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு, மார்ச், 2012- நூல் உலக நெருக்கடியும், அமைதிக்கான தீர்வும்- பக்கம் 49)

இவ்வாறே அல்லாஹ் கூறுகின்றான்: ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவை அவர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

இது பற்றி அவன் கூறியுள்ளான்:

اِنَّ لَكَ اَلَّا تَجُوْعَ فِيْهَا وَلَا تَعْرٰى ○

وَاَنَّكَ لَا تَظْمَؤُا فِيْهَا وَلَا تَضْحٰى ○

பொருள்: நீர் பசியுடனோ அல்லது ஆடையின்றியோ இருக்கலாகாது (என்பது உமக்கு விதிக்கப்பட்டுள்ளது). மேலும் தாகமுடையவராகவும், வெயிலில் காய்பவராகவோ இருக்கலாகாது. (ஸூரா தாஹா: 119 - 120)

சமூகநீதியின் அடிப்படை தேட்டம் குடும்ப அளவில் நீதி நிலைபெறுதல் ஆகும். பெற்றோரிடம் கருணை காட்டுதல் என்பதில் பிள்ளைகள் அவர்களிடம் மென்மை, அன்பு மற்றும் கருணையின் நன்நடத்தையை மேற்கொள்வதுடன் அவர்களுக்கு (இறைவன்) கருணை காட்ட துஆ செய்ய வேண்டும்.

உதாரணமாக, அல்லாஹ் கூறியுள்ளான்.

قُلْ تَعَالَوْا اَتْلُ مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ
اَلَّا تُشْرِكُوْا بِهٖ شَيْـًٔا وَّبِالْوَالِدَيْنِ اِحْسَانًا ۚ
وَلَا تَقْتُلُوْٓا اَوْلَادَكُمْ مِّنْ اِمْلَاقٍ ؕ
نَحْنُ نَرْزُقُكُمْ وَاِيَّاهُمْ ۚ
وَلَا تَقْرَبُوا الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا
وَمَا بَطَنَ ۚ وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِيْ حَرَّمَ اللّٰهُ اِلَّا بِالْحَقِّ
ذٰلِكُمْ وَصّٰىكُمْ بِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ

பொருள்: நீர் (அவர்களிடம்) கூறுவீராக! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடுத்தவற்றை நான் உங்களுக்குப் படித்துக் காட்டுகின்றேன். நீங்கள் எப்பொருளையும் அவனுக்கு இணையாக்காதீர்கள். மேலும், பெற்றோரிடத்தில் மிக்க நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளை கொலை செய்யாதீர்கள். நாமே உங்களுக்கும், அவர்களுக்கும் உணவளிக்கின்றோம். தீமைகள் வெளிப்படையாயிருப்பினும், மறைமுகமாயிருப்பினும் அவற்றின் பால் நெருங்காதீர்கள். அல்லாஹ் தடுத்துள்ள உயிரை (சட்ட) அனுமதியின்றிக் கொலை செய்யாதீர்கள். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அல்லாஹ் உங்களுக்கு இது குறித்துக் கட்டளை விடுகின்றான்.(அல்அன்ஆம்: 152)

குடும்ப வாழ்வில் நீதி என்பது கணவன், மனைவி இருவரும் பகிரங்கமான தீமைகளிலிருந்தும், வெட்கக்கேடுகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.மேலும் அவற்றிற்கு அருகில் கூட செல்லக் கூடாது.(அல் அன்ஆம்: 152)

அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَا تَقْتُلُوْٓا اَوْلَادَكُمْ خَشْيَةَ اِمْلَاقٍ ؕ
نَحْنُ نَرْزُقُهُمْ وَاِيَّاكُمْ ؕ اِنَّ قَتْلَهُمْ كَانَ خِطْاً
كَبِيْرًا ۝ وَلَا تَقْرَبُوا الزِّنٰٓى اِنَّهٗ كَانَ فَاحِشَةً ؕ
وَسَآءَ سَبِيْلًا

நீங்கள் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். நாமே உங்களுக்கும் உணவளிக்கின்றோம். அவர்களைக் கொலை செய்வது நிச்சயமாக (மா) பெரும் குற்றமாகும்.(சூரா பனீ இஸ்ராயீல்: 32 - 33)

சமூகத்தின் ஒட்டுமொத்த அங்கத்தினர்களும் உறவினர்கள், அனாதைகள், அருகிலும் தொலைவிலும் இருக்கும் ஏழைகள், அண்டை அயலார்கள், நண்பர்கள், பயணிகள் ஆகிய அனைவருடனும் நீதியுடன் நடப்பது மட்டுமல்ல மாறாக அழகிய முறையில் நடப்பதும் கடமையாகும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாம் அண்டை அயலாரின் உரிமைகளையும் நிர்ணயித்துள்ளது. அண்டை அயலார் யார்? அவர்களின் உரிமைகள் என்ன? என்று திருக்குர்ஆன் விளக்கமாக வழிகாட்டுகின்றது. எவர் உங்களுடன் அமர்ந்திருப்பாரோ அவரும் (உங்கள்) அக்கம் பக்கத்தவர் ஆவார். நீங்கள் தெரிந்த( அல்லது) தெரியாத பக்கத்து வீட்டினரும் (அண்டை அயலாரே)

உண்மையில் அண்டை அயலாரின் வட்டம் நாற்பது வீடுகள் வரை அடங்கும். உங்களுடன் இணைந்து பயணிப்பவரும் அண்டை அயலர் தான்.அவர்கள் மீது அக்கறை காட்ட வேண்டும் என்ற கட்டளை உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (பைத்துர் ரஷீத் பள்ளிவாசல் ஹம்பர்க்,ஜெர்மனி 2012-ல் ஆற்றிய சொற்பொழிவு- நூல் உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் பக்கம்- 111)

குடும்ப அளவில் நீதி நிலைபெற பலவீனமான மக்கள், அனாதைகள், விதவைகளின் செல்வங்களை பாதுகாத்தல், வறியவர்கள் மற்றும் அடிமைகளின் உரிமைகளை செலுத்துதல் மிகவும் அவசியமாகும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாத்தின் மற்றொரு மகத்தான போதனை ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்களின் உரிமைகளை செலுத்துவது தொடர்பானதாகும். இதில் நமக்கு இவ்வாறான வாய்ப்புகளை தேடும் போதனை உள்ளது. குறிப்பாக ஆதரவற்றவர்களுக்கு ஒப்பற்ற முறையில் உதவி செய்ய வேண்டும். மேலும், அவர்களிடமிருந்து எவ்விதத்திலும் வேறு எதனையும் பெறக் கூடாது. துரதிஷ்டவசமாக இன்றை சூழலில் வெளிப்படையாக உதவுகின்றவாறு திட்டங்களும், வாய்ப்புகளும் தோற்றுவிக்கப்படுகின்றன. எனினும், அவை Credit system- ஐ அடிப்படையாக கொண்டுள்ளதுடன் (தொகை) திருப்பி செலுத்தும்போது வட்டியுடன் வசூல் செய்யப்படுகின்றது.

இஸ்லாத்தின் மீது அடிக்கடி செய்யப்படும் ஆட்சேபனை பெண்களுக்கு சரிசமமான உரிமைகளை இஸ்லாம் கொடுக்கவில்லை என்பதாகும். இந்த ஆட்சேபனை முற்றிலும் அடிப்படையற்றதாகும். இஸ்லாம் பெண்களுக்கு மதிப்பும், மரியாதையும் வழங்கியுள்ளது. நான் ஒரிரு உதாரணங்களை தருகின்றேன்:

பெண் என்பவள் அடிமையாகவும், வியாபாரப் பொருளாகவும் கருதப்பட்டு வந்த காலத்திலேயே, தனது மோசமான கணவரிடமிருந்து விவகாரத்து பெறும் உரிமையை இஸ்லாம் ஒரு பெண்ணிற்கு வழங்கியுள்ளது. ஆனால், பெண்ணின் இந்த உரிமையை பொருத்தமான வழிமுறைப்படி கிடைக்கச் செய்ய வேண்டும் என வளர்ந்த நாடுகள் கடந்த நூற்றாண்டில் தான் ஒப்புக் கொள்ள ஆரம்பித்துள்ளன. இது மட்டுமின்றி, பெண்ணிற்கு எந்தவொரு அந்தஸ்தும், முக்கியத்துவம் கிடையாது என்று கருதப்பட்டு வந்த காலகட்டத்தில் வாரிசுரிமையை இஸ்லாம் பெற்றுக் கொடுத்துள்ளது. ஐரோப்பாவில் இந்த உரிமை நிகழ்காலத்தில் தான் கிடைத்துள்ளது.

(பைத்துர் ரஷீத் பள்ளிவாசல், ஹம்பர்க், ஜெர்மனி 2012-ல் ஆற்றிய சொற்பொழிவு- நூல் உலக நெருக்கடியும்,அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 110-111)

சமூகத்தில் அமைதி நிலைபெற உரையாடும்போதும் நீதியுடன் சரியான சொற்களை பேசவேண்டும் என்ற கட்டளை உள்ளது.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَقُوْلُوْا قَوْلًا سَدِيْدًا

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி சரியானதும் உண்மையானதுமான) வார்த்தையைக் கூறுங்கள்.

(அல் அஹ்ஸாப் : 71)

நீதி நிலைபெறுவதற்கும் உண்மையான சாட்சி செல்வதும் அடிப்படையானதாகும். ஒருவேளை அந்த உண்மை தமது பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கு எதிராகவே இருந்தாலும் சரியே!

அல்லாஹ் கூறுகின்றான்:

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ بِالْقِسْطِ شُهَدَآءَ لِلّٰهِ
وَلَوْ عَلٰٓى اَنْفُسِكُمْ اَوِ الْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ ۚ
اِنْ يَّكُنْ غَنِيًّا اَوْ فَقِيْرًا فَاللّٰهُ اَوْلٰى بِهِمَا ۫
فَلَا تَتَّبِعُوا الْهَوٰٓى اَنْ تَعْدِلُوْا ۚ وَاِنْ تَلْوٗٓا
اَوْ تُعْرِضُوْا فَاِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாயிருங்கள். (யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ) அவர் செல்வராயினும், ஏழையாயினும் சரி. அல்லாஹ் அவ்விருவருக்கும் (உங்களை விட) அதிக அளவில் நன்மையை விரும்பக்கூடியவனாவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு அற்ப ஆசைகளைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் (உண்மையை) மறைக்கவோ, தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிகின்றான்(என்பதை நினைவில் கொள்ளுங்கள்).

(அந்நிஸா: 136)

இந்த வசனத்தின் ஒளியில் ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறியுள்ளார்கள்:

நாம் இந்த அடிப்படையை முழுமையாக ஆராய்ந்தோம் என்றால் நேர்மையற்ற தீர்மானங்களை ஒப்புக் கொள்ளச் செய்வதற்கான வழிமுறைகள் செல்வத்தாலும், படை பலத்தாலும் மேற்கொள்ளப்படுகின்றன;மேலும் அவற்றை தவிர்க்க வேண்டும் என்ற உணர்வு நமக்கு உண்டாகும். இதற்குப் பகரமாக ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகள் மற்றும் தலைவர்கள் களங்கமற்ற மனத் தூய்மையுடன், நேர்மையுடன் சகோதரத்துவ உடன்படிக்கையின் ஆவலுடன் முன்வர வேண்டும். நாம் எல்லா வகையான பாராபட்சங்களையும், வேறுபாடுகளையும் முற்றிலும் களைய வேண்டும்.ஏனெனில், அமைதி நிலைபெற இதுவே ஒரே வழியாகும்.

ஒருவேளை நாம் ஐ.நாவின் பொது சபை அல்லது பீஸ் கவுன்சில் போன்றவற்றை ஆராய்ந்தால் அங்கு செய்யப்படும் சொற்பொழிவுகளும், தீர்மானங்களும் மிகவும் புகழவும், பாராட்டவும்படுகின்றன. எனினும், இந்த அங்கீகாரங்கள் அர்த்தமற்றவையாகும். அசல் தீர்ப்புகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகின்றன.

எனவே எங்கு தீர்ப்புகள் வல்லரசுகளின் அழுத்தம் மற்றும்

நிர்ப்பந்தத்தின் காரணத்தாலும் நீதி, நேர்மை மற்றும் உண்மைக்கு எதிராகவும் செய்யப்படுமோ அங்கு அவ்வாறான சொற்பொழிவுகள் வீணானதும், அர்த்தமற்றதும் ஆகும். மேலும் உலகை ஏமாற்றும் வேலை மட்டுமே ஆகும். எனினும், அயர்வடைந்து நாம் நமது முயற்சிகளை விட்டு விட வேண்டும் என்பதும் ஒருபோதும் எனது கருத்து கிடையாது.

இதற்கு மாற்றமாக நாம் நாட்டின் சட்டத் திட்டங்களுக்கு கட்டுப்பட்டவாறு நமது குறிக்கோள் என்னவாக இருக்க வேண்டுமெனில் சூழ்நிலைகளை நாம் எவ்வாறு கையாள வேண்டுமென நாம் அரசாங்கத்திற்கு (பொருத்தமான முறைப்படி) நினைவூட்டியவாறு இருக்க வேண்டும். மேலும், சுயநலவாதிகளுக்கும் நாம் அறிவுறுத்தியவாறு இருக்க வேண்டும். அப்போதுதான் உலக அளவில் அமைதி நிலைபெறும். இந்நிலையில் மட்டுமே அமைதி மற்றும் சமாதானத்தின் பிறப்பிடமாக உலகை நாம் ஆக்க இயலும். இதுவே நம் அனைவரின் விருப்பமும் கூட!

(ஒன்பதாவது அமைதி கருத்தரங்கம், லண்டன், மார்ச்ச 24, 2012, சொற்பொழிவு - உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 42)

வியாபாரத்தில் அமைதி நிலைபெற முழுமையாக அளக்க வேண்டும்; அதில் நேர்மையுடன் செயல்பட வேண்டும்.

وَلَا تَقْرَبُوْا مَالَ الْيَتِيْمِ اِلَّا بِالَّتِىْ هِىَ اَحْسَنُ
حَتّٰى يَبْلُغَ اَشُدَّهٗ ۚ وَاَوْفُوا الْكَيْلَ

وَالْمِيْزَانَ بِالْقِسْطِ ۚ لَا نُكَلِّفُ نَفْسًا اِلَّا وُسْعَهَا ۚ

وَاِذَا قُلْتُمْ فَاعْدِلُوْا وَلَوْ كَانَ ذَا قُرْبٰى ۚ وَبِعَهْدِ
اللّٰهِ اَوْفُوْا ؕ ذٰلِكُمْ وَصّٰكُمْ بِهٖ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ

நீங்கள் அனாதையின் உடைமையை அவர் தமது வாலிபப் பருவத்தை அடையும் வரை முறையின்றி நெருங்காதீர்கள். மேலும் அளவையையும், நிறுவையையும் முழுமையாகக் கொடுப்பதில் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். நாம் தகுதிக்கு அப்பாற்பட்ட சுமையை எவர்க்கும் வழங்குவதில்லை. நீங்கள் பேசும் பொழுது அது உறவினர் (குறித்து) ஆக இருப்பினும் நேர்மையைக் கடைபிடியுங்கள். மேலும், அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நீங்கள் கவனத்தில் கொள்ளும் பொருட்டு அவன் உங்களுக்கு இதனை வலியுறுத்திக் கூறுகின்றான்.
(அல் அன்ஆம்: 153)

அல்லாஹ் திருக்குர்ஆனில் எதிரிகளுடனும் நேர்மையுடன் நடந்து கொள்ள கட்டளையிட்டுள்ளான். நீதி, நேர்மை பற்றி எவ்வளவு ஒப்பற்ற உதாரணம் எனில் வேறு எந்தவொரு புத்தகமும் இதற்கு நிகராக கூற இயலாது.

அல்லாஹ் கூறுகின்றான்:

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ لِلّٰهِ شُهَدَآءَ بِالْقِسْطِ ۫

وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰۤى اَلَّا تَعْدِلُوْا ؕ
اِعْدِلُوْا ۗ هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى ۫

وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகிறான்.
( அல்மாயிதா: 9)

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறுகின்றார்கள்:

இதுவே சுற்றுச் சூழலில் அமைதியை நிலைநாட்டுவதற்கான போதனையாகும். உங்கள் எதிரியின் விவகாரங்களில் கூட நீதியை கைவிடாதீர்கள் என (இறைவன்) கூறியுள்ளான். இந்தப் போதனையின்படி செயல் அமைந்திருந்தது என்று இஸ்லாத்தின் ஆரம்ப வரலாறு கூறுகின்றது.மேலும், நீதி நேர்மையின் அத்தனை அம்சங்களும் நிறைவேற்றப்பட்டன. மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமக்கு கொடும் வேதனையளித்தவர்களிடம் கூட பழிவாங்கவில்லை என்ற உண்மைக்கு வரலாறு சாட்சி பகர்கின்றது!

அன்னார் (ஸல்) அந்த எதிரிகளை மன்னித்தது மட்டுமல்லாமல் நீங்கள் உங்கள் மார்க்கத்திலேயே நிலைத்திருக்கலாம் என்ற அனுமதியும் வழங்கினார்கள். (பிரிட்டிஷ் பாராளுமன்றம், ஹவுஸ் ஆஃப் காமர்ஸ் என்ற இடத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு, அக்டோபர் 22, 2008, நூல் - உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 14)


இஸ்லாத்தில் ஆட்சியாளர்கள் பொதுமக்களிடம் நீதியுடன் நடக்க வேண்டும் என்ற கட்டளை உள்ளது. மேலும், ஆட்சியாளர்களுக்குரிய அமானிதத்தை பொதுமக்கள் தகுதியானவர்களிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும் எனவும், அவர்கள் தமது ஆட்சியாளர்களின் நல்ல கட்டளைகளுக்கு கீழ்படிய வேண்டும் எனவும் இஸ்லாம் கூறுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰۤى اَهْلِهَا ۙ
وَاِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ اَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ ؕ
اِنَّ اللّٰهَ نِعِمَّا يَعِظُكُمْ بِهٖ ؕ اِنَّ اللّٰهَ كَانَ سَمِيْعًاۢ بَصِيْرًا

நீங்கள் அமானிதங்களை (நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை) அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படையுங்கள். நீங்கள் மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கும்போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். அல்லாஹ் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றது எதுவோ நிச்சயமாக அதுவே மிகவும் சிறந்தது. நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும், பார்ப்பவனுமாவான்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ
وَاُولِى الْاَمْرِ مِنْكُمْ ۚ فَاِنْ تَنَازَعْتُمْ فِىْ شَىْءٍ
فَرُدُّوْهُ اِلَى اللّٰهِ وَالرَّسُوْلِ اِنْ كُنْتُمْ تُؤْمِنُوْنَ
بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ ذٰلِكَ خَيْرٌ وَّاَحْسَنُ
تَاْوِيْلًا


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM



Dealers of Natural Precious & Semi-Precious Gemstones

TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com

Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com

HGEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com


நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடவுங்கள். இத்தூதருக்கும், உங்களுடைய அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். பின்னர் உங்களுக்குள் ஏதாவது ஒன்றில் தர்க்கம் ஏற்பட்டால் நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூதரிடத்தும் இறுதி நாளிடத்தும் நம்பிக்கை கொண்டவர்களாயின் அதனை அல்லாஹ்விடமும், இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள்.இது சிறந்ததும், மிக்க நல்ல முடிவைத் தருகின்றதுமாக இருக்கும்.
(அந்நிஸா: 59 - 60)

மார்க்கங்களுக்கிடையே நீதியை நிலைநாட்ட அடிப்படையான வழிமுறை என்னவெனில், .மார்க்கத்தில் எந்தவொரு பலவந்தமும் இல்லை என்பதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

لَاۤ اِكْرَاهَ فِى الدِّيْنِ ۙ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَىِّ ۚ
فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْۢ بِاللّٰهِ فَقَدِ
اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى ۗ
لَا انْفِصَامَ لَهَا ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ

மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை.(ஏனெனில்) நிச்சயமாக நேர்வழிக்கும், தவறான வழிக்கும் இடையிலுள்ள வேறுபாடு மிகத் தெளிவாகி விட்டது. எனவே நன்மைகளைச் செய்ய விடாது தடுக்கக் கூடியவனை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறவர் அறுந்து விடாத மிகவும் உறுதியுள்ள நம்பத் தகுதந்த ஒன்றை வலுவாகப் பற்றிக் கொண்டார். அல்லாஹ் நன்கு செவியேற்றபவனும் நன்கு அறிபவனுமாவான். (அல்பக்ரா :257)

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாம் வாளின் வலுவால் பரவியது என்ற ஆட்சேபனையை மட்டும் இந்த வசனம் மறுக்கவில்லை. மாறாக, ஈமான் கொள்வது அடியாருக்கும் அவரது இறைவனுக்கும் இடைப்பட்ட விஷயமாகும். இதில் எவரும் தலையிட முடியாது என்று முஸ்லிம்களுக்கு கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் தமது மார்க்கத்திற்கேற்ப வாழ்க்கையை அமைக்கவும், இறை வணக்கம் செய்யவும் அனுமதியுள்ளது. எனினும், ஒருவேளை மத ரீதியிலான செயல்கள் பிறருக்கு இடையூறு விளைவித்தாலோ நாட்டின் சட்டங்களுக்கு புறம்பானாலோ சட்டத் திருத்தம் செய்பவர்கள் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம். ஏனெனில், மத ரீதியாக ஏதேனும் கொடுமை செய்யப்பட்டால் அவை இறைத் தூதர்கள் கொண்டு வந்த போதனையாக ஒருபோதும் இருக்காது. வட்டார மற்றும் உலக அளவில் அமைதி நிலைபெறுவதற்கு இவையோர் அடிப்படைக் கட்டளையாகும். ஒருவேளை ஏதாவதொரு சமுதாயம், பிரிவு அல்லது அரசு இன்று உங்களுடைய மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதில் தடையாகிவிட்டால் பின்னர் வருங்காலத்தில் நிலைமைகள் உங்கள் உரிமையில் மாறிவிடும்போது அவர்கள் மீது உங்கள் உள்ளத்தில்


நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

பகையோ வெறுப்போ வைக்க வேண்டாம் என இஸ்லாம் நமக்கு போதிக்கின்றது. உங்களுக்கு ஒருபோதும் பழிவாங்கும் எண்ணம் வரக் கூடாது. மாறாக, நீதி நேர்மையை நிலைநாட்டுவதே உங்கள் கடமையாகும். (வரலாற்று சிறப்பு மிக்க சொற்பொழிவு 22, அக்டோபர் 2008,பிரிட்டிஷ் பாராளுமன்றம், ஹவுஸ் ஆஃப் காமர்ஸ், நூல் - உலக நெருக்கடியும், அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 14)

திருக்குர்ஆனில் நாடுகளுக்கு மத்தியில் அமைதி நிலைபெறுவதற்கு உலகளாவிய நீதி, நேர்மை குறித்து இவ்வாறு கட்டளை உள்ளது.

وَإِنْ طَآئِفَتَانِ مِنَ الْمُؤْمِنِينَ اقْتَتَلُوا فَأَصْلِحُوا بَيْنَهُمَا ۚ
فَإِنْ بَغَتْ إِحْدٰىهُمَا عَلَى الْأُخْرٰى فَقَاتِلُوا
الَّتِي تَبْغِي حَتّٰى تَفِيٓءَ إِلٰٓى أَمْرِ اللّٰهِ ۚ
فَإِنْ فَآءَتْ فَأَصْلِحُوا بَيْنَهُمَا بِالْعَدْلِ وَأَقْسِطُوا ۖ
إِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِينَ

நம்பிக்கையாளர்களுள் இரு பிரிவினர்கள் தங்களுக்குள் போர் செய்தால் அவ்விரண்டு பிரிவினர்களுக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள். இதன் பின்னர் அவற்றுள் ஒன்று மற்றொன்றிற்கு எதிராக வரம்பு மீறினால், வரம்பு மீறுகின்ற பிரிவினர், அல்லாஹ்வின் கட்டளையின்பால் திரும்பி வரும் வரை நீங்கள் அவர்களை எதிர்த்துப் போர் செய்யுங்கள். பின்னர் அவர்கள் திரும்பி வந்து விட்டால் அவர்களுக்கிடையே நியாயத்துடன் சமாதானம் செய்து நீதமாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதமாக நடந்து கொள்பவர்களை நேசிக்கின்றான்.
(அல் ஹுஜ்ராத்: 10)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்: இந்த போதனை முஸ்லிம்களுக்கு உரியதாக இருப்பினும் இதை பேணுவதால் உலக அமைதிக்கான அடித்தளமிட முடியும். அமைதியை நிலைநாட்டுவதற்கு நீதியை நிலைநாட்டுவது மிகவும் அவசியமாகும் என ஆரம்பத்திலேயே விளக்கமாக கூறப்பட்டது. மேலும், நீதியை நிலைநாட்டிய பிறகும் அமைதியை நிலைநாட்டும் முயற்சிகள் தோல்வியடைந்தால் அநீதி இழைக்கும் எதிர் தரப்பினருடன் அனைவரும் சேர்ந்து போரிட வேண்டும். அநீதி இழைப்பவர்கள் அமைதியை நிலைநாட்ட பாடுபடாத வரை இந்தப் போர் தொடரும். எனினும், அநீதி இழைப்பவர்கள் கொடுமையை நிறுத்தி விட்டால் பிறகு பழிவாங்குவதற்கு சாக்குபோக்குகளை தேடக் கூடாது என்பது நீதியின் எதிர்பார்ப்பாகும். மேலும், விதவிதமான கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது. அநீதி இழைப்பவர்கள் மீது பார்வை வைப்பதுடன் அவர்களின் நிலைமைகளை சிறப்பாக்குவதற்காகவும் முயற்சி செய்ய வேண்டும்.

இன்று சில உலக நாடுகளில் நிலவும் இந்த அமைதியற்ற நிலையை முடிவுக்கு கொண்டு வருவதற்காக, மேலும், துரதிஷ்டவசமாக அவற்றில் சில முஸ்லிம் நாடுகளில் இந்த நிலை தெளிவாக இருக்கின்றது; எனவே வீட்டோ அதிகாரம் பெற்றிருக்கின்ற அந்த நாடுகள் சரியான முறையில் நீதி நிலைநாட்டப்படுகின்றதா?என்று குறிப்பாக ஆய்வு செய்ய வேண்டும். உதவி தேவைப்படும்போது பலம் படைத்த நாடுகளே உதவிக்கு அழைக்கப்படுகின்றன. (சொற்பொழிவு அக்டோபர் 22, 2008, பாராளுமன்றம் ஹவுஸ் ஆஃப் காமர்ஸ், நூல் - உலக நெருக்கடியும், அமைதிக்கான வழிமுறையும் - பக்கம் 17)

**உலக நாடுகளுக்கு மத்தியில் அமைதி மற்றும் நீதி**

இந்த முக்கியமான கட்டளையை மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனத்தில் உலக நாடுகளுக்கு மத்தியில் சமாதானம் நிலைபெறுவதற்கு பின்வரும் நுட்பமான வழிமுறை கூறப்பட்டுள்ளது: முதன் முதலில் இரு சமுதாயங்களுக்கிடையில் சண்டை, குழப்பங்களின் அறிகுறிகள் தென்பட்டால் உடனே இன்னொரு சமுதாயம் ஒரு தரப்பிற்கு ஆதரவாக செயல்படுவதற்குப் பகரமாக இரு சமுதாயங்களுமே அவர்களுக்கிடையில் சண்டைக்கான தீர்வு காண்பதற்கு அறிவுறுத்த வேண்டும். ஒருவேளை அவர்கள் ஒப்புக் கொண்டால் சண்டை தீர்ந்து விடும்.எனினும், ஒருவேளை ஒரு தரப்பினர் ஒப்புக் கொள்ளவில்லையென்றால் பிறகு இரண்டாவது நடவடிக்கையாக இதனை எடுக்க வேண்டும். அதாவது, எஞ்சிய அனைத்து சமுதாயங்களும் சேர்ந்து அவர்களுடன் போரிட வேண்டும். எல்லா சமுதாயத்தையும் ஒரு சமுதாயத்தால் எதிர் கொள்ள முடியாது என்பது வெளிப்படை ஆகும். எனவே அவர்கள் விழிப்படைந்து, சமாதானத்திற்கு விரைவில் தயாராக வாய்ப்புள்ளது. எனவே அவர்கள் சமாதானத்திற்கு தயாராகிவிட்டால் மூன்றாவது நடவடிக்கையாக இதனை எடுக்க வேண்டும். அதாவது எந்த இரண்டு சமுதாயங்களுக்கிடையிலான சண்டையின் காரணமாக போர் ஆரம்பித்ததோ அவர்களுக்கிடையே சமாதானம் செய்து வைக்க வேண்டும். அதாவது அப்போது தம்மையே எதிர் தரப்பாக்கி தாமே உடன்படிக்கைகள் செய்யக் கூடாது. மாறாக, தமது பழைய உடன்படிக்கைகளுடன் தான் இருக்க வேண்டும். எந்தக் காரணத்தால் போர் மூண்டதோ அந்தச் சண்டையை மட்டுமே தீர்க்க வேண்டும். அந்தப் போரைக் கொண்டு புதிய நிபந்தனைகளை வைத்து என்றென்றும் குழப்பம் ஏற்பட அடித்தளம் அமைக்கக் கூடாது.

நான்காவதாக, இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது உடன்படிக்கை நீதியை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும். ஒரு பிரிவு எதிர்த்ததால் அதற்கு எதிராக தீர்ப்பளித்து விடக் கூடாது. மாறாக, போர் என்ற போதிலும் கூட உங்களை நீங்கள் நடுவர் தரப்பு வரிசையிலேயே வைக்க வேண்டும். எதிரிகளாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. (அஹ்மதிய்யத், அதாவது ஹக்கீகி இஸ்லாம், அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 314)

தமிழாக்கம்
முஅல்லிம் நாஸிர் அஹ்மத்

* * * * * * * *

## மல்ஃபூஸாத் முதல் பக்கத் தொடர்ச்சி..

தனது இருப்பிற்கான செய்தியை மட்டும் வழங்குவதில்லை ; தனது கருணை மற்றும் அருளின் தாக்கங்களையும் அவர்கள் மீது சிறப்பாக வெளிப்படுத்துகின்றான். மேலும் அது இவ்வாறாகும். அதாவது, அவர்களின் துஆக்களை வெளிப்படையான எதிர்பார்ப்புகளிலிருந்து அதிகமாக ஒப்புக் கொண்டு தனது இல்ஹாம் மற்றும் உரையாடல் மூலமாக அவர்களுக்கு தகவல் கொடுக்கின்றான். அப்போது இவன் நமது வல்லமை மிக்க இறைவன் ஆவான்; அவன் நமது துஆக்களை கேட்கின்றான்; மேலும் நமக்கு தகவல் கொடுக்கின்றான்; மேலும் கஷ்டங்களிலிருந்து நம்மை காப்பாற்றுகின்றான் என்று அவர்களின் உள்ளம் ஆறுதல் அடைகின்றது. அந்த நாள் முதலே இரட்சிப்பின் விவகாரமும் புரிய வருகின்றது. மேலும் இறைவனின் இருப்பைப் பற்றி விஷயமும் தெரிய வருகின்றது. சிலநேரம் அவன் விழிப்பூட்டுவதற்குகாகவும், எச்சரிக்கை செய்வதற்காகவும் அந்நியர்களுக்கும் கூட உண்மையான கனவு வரக் கூடும். ஆனால், இந்த வழிமுறையிலான அந்தஸ்தும், மேன்மையும், அழகும் வேறு வகையிலானதாக இருக்கின்றது. இது வல்ல இறைவனுடனான உரையாடல் ஆகும். இது சிறப்பான நெருக்கத்தைப் பெற்றவர்களுடன் மட்டுமே நிகழ்கின்றது. (இறை) நெருக்கம் பெற்ற நபர் துஆ செய்கின்ற போது வல்ல இறைவன் தனது இறைமைக்கான கம்பீரத்துடன் அவரிடம் வெளிப்படுகின்றான். மேலும் தனது ஆன்மாவை அவர் மீது இறக்குகின்றான். மேலும் அன்பு நிறைந்த தனது சொற்களுடன் அவருக்கு துஆ ஒப்புக் கொள்ளப்படுதலுக்கான நற்செய்தியை வழங்குகின்றான். எவருடன் இந்த உரையாடல் அதிகமாக நிகழ்கின்றதோ அவரை நபி அல்லது முஹத்திஸ் என்று கூறுகின்றோம்.
(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 16, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * * * *

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 02 -09 JANUARY 2025 Issue No 1 & 2

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# தஃப்ஸீரே கபீர்
## முதல் பக்கத் தொடர்ச்சி..

செல் ; மேலும் உனது மகனை குர்பானி கொடு; ஏனெனில் மக்களிலிருந்து தனித்து, எனது சிறப்பான பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பில் ஒரு பன்னீர் நடப்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்! என்று அவரிடம் இறைவன் கூறினான். இங்கு பன்னீர் என்பதன் பொருள் நன்மை மற்றும் இறையச்சம் ஆகும். ஒரு நீரூற்று வெளிப்பட்டு விட அவ்வாறு செய்வீராக. இதன் பொருள் தூய்மை மற்றும் பரிசுத்ததிற்கான நீரூற்று வெளிப்பட என்பதாகும். அப்போது, மிகவும் நல்லது; நான் தயாரக இருக்கின்றேன் என்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் கூறினார்கள். ஆக, அவர்கள் தமது முதுமைப் பருவத்தில் தமக்கு கிடைத்த அந்த மகனை அந்த பாலைவனத்தில் கொண்டு சென்று விட்டுவிட்டார்கள். அது தொடர்பாக திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது; அங்கு உண்பதற்கும், குடிப்பதற்கும் எந்த ஏற்பாடும் இருக்கவில்லை. இறைவனின் நினைவு மேலோங்க வேண்டும் என்பதற்காகவும், மறைந்த அவனது மகத்துவம் மீண்டும் நிலைபெற வேண்டும் என்பதற்காகவும் மட்டுமே அத்துனை அபாயம் நிறைந்த மற்றும் பயங்கரமான பாலைவனத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) தமது மகனையும், அவரது தாயையும்( அதாவது தமது மனைவியையும்) விட்டுச் சென்றார்கள். ஒரேயொரு தண்ணீர் பையும், ஒரு பை பேரீத்தம் பழமும் அந்தத் தாய் மற்றும் குழந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் தொடர்பாக இந்த இறை தீர்ப்பு இருந்தது. அதாவது இனி இவர்கள் இதே வனத்தில் நிரந்தரமாக தமது வாழ்வை கழிக்க வேண்டும் என்று இறைவன் தீர்மானித்திருந்தான். ஒரு தண்ணீர் பையும், ஒரு பை பேரீத்தம் பழமும் எத்தனை நாட்கள் பயனளிக்க முடியும்? என்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் எண்ணினார்கள்.

அடுத்து மண்துகள்கள் மற்றும் சூரியனின் ஒளியையும் தவிர வேறு எந்தவொரு பொருளும் எனது மனைவிக்கும், பிள்ளைக்கும் இருக்காது என்று எண்ணினார்கள். இந்த எண்ணம் தோன்றிய உடனேயே அன்னார் (அலை) உருக்கம் அடைந்து விட்டார்கள். மேலும் கண்களில் கண்ணிர் நிறைந்து விட்டது. அன்னாரது கண்களின் கண்ணீர் மற்றும் உதடுகள் பதை பதைப்பை வைத்து விவகாரம் வேறொன்றாகும் என்று ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். அன்னார் (அலை) ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் பின்னால் சென்றார்கள்; இப்ராஹீமே! நீங்கள் எங்களை எங்கே விட்டு விட்டுச் செல்கின்றீர்? இங்கோ குடிப்பதற்கு தண்ணீர் கூட இல்லையே ; உண்பதற்கு எந்த உணவும் இல்லையே ; என்று கேட்டார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் பதில் கொடுக்க விரும்பினார்கள். ஆனால், உருக்கத்தின் காரணமாக சப்தம் வெளிவரவில்லை. அப்போது, நீங்கள் இறைவனின் கட்டளையினால் இவ்வாறு செய்கின்றீர்களா? அல்லது உங்களது விருப்பத்தின் படியா? என்று ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் வானத்தை நோக்கி தமது இரண்டு கரங்களையும் உயர்த்தினார்கள். அதன் பொருள் இதுவாக இருந்தது. அதாவது நான் இறைவனின் கட்டளையின்படியே இவ்வாறு செய்கின்றேன். அன்னார் (ரலி) உறுதியுடனும், ஈமானாலும் நிறைந்திருந்தார்கள். மேலும் அன்னார் (ரலி) தமது இளமைப் பருவத்தை அடைந்திருந்தாரகள். அன்னாருக்கு ஒரேயொரு மகனே இருந்தார்கள். அவர் அந்நேரத்தில் மரணத்திற்கு இரையாகிக் கொண்டிருந்தார். ஆனால் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் அந்த பதிலைக் கேட்டதும் ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் உடனே நின்று விட்டார்கள். மேலும் கூறினார்கள்: விஷயம் இதுவென்றால் பின்னர் இறைவன் ஒருபோதும் எங்களை வீணாக்க மாட்டான்.

இறுதியில் தண்ணீர் தீர்ந்து போனது; உணவும் தீர்ந்து போனது. அந்தப் பகுதியில் எந்தவொரு பொருளும் தென்படவில்லை என்ற போதிலும், தாகத்தால் துடித்துக் கொண்டிருந்த தனது பிள்ளையின் துன்பத்தைக் கண்டு யாராவது ஒரு மனிதர் தென்பட்டு விட மாட்டாரா; அவரிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டு பெற்று விடலாமே அல்லது ஏதாவது மக்கள் வசிப்பிடம் தென்பட்டு விடாதா? என்று ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் ஒரு குன்றின் மேலே ஏறினார்கள். எந்த அளவிற்கு மனிதப் பார்வை செயல்பட முடியுமோ அதைக் கொண்டு அன்னார்(ரலி) பார்த்தார்கள். ஆனால், அவர்களுக்கு எங்கும் தண்ணீரின் அடையாளம் கூட தென்படவில்லை. அப்போது அன்னார் (ரலி) அதே பதற்றத்துடன் கீழே இறங்கினார்கள். மேலும், அடுத்தக் குன்றின் மீது ஓடியவாறு ஏறினார்கள். அங்கிருந்தும் பார்த்தார்கள். ஆனால், தண்ணீருக்கான எந்த அடையாளமும் தெரியவில்லை. இதே துடிப்புடனும், வேதனையின் நிலையிலும் ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் ஏழு முறை ஓடினார்கள். மேலும் இறுதியில் இனி நடக்குமோ என்று அன்னாரது இதயம் அமைதியாகி விட்டது. அப்போது, உடனடியாக இறைவனின் இந்த இல்ஹாம் இறங்கியது. அதாவது ஹாஜிராவே! இறைவன் உமது பிள்ளைக்கான ஏற்பாட்டை செய்து விட்டான்; செல்; சென்று உமது பிள்ளையைப் பார்! என்ற இல்ஹாம் இறங்கியது. ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் திரும்பி சென்ற போது, அன்னார் (ரலி) கண்டார்கள்; அதாவது எங்கு குழந்தை தாகத்தால் துடித்துக் கொண்டிருந்ததோ அங்கு ஓர் நீரூற்று வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த நீரூற்றையே ஜம் ஜம் நீரூற்று என்று கூறுகின்றோம். உண்மையில் மகிழ்ச்சியில் பாடப்படுகின்ற பாடலுக்கு ஜம், ஜம் என்று கூறப்படும். ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் சுயமே அந்த நீரூற்றுக்கு ஜம் ஜம் என்று பெயர் வைத்திருந்தார்கள் என தெரிய வருகின்றது. ஏனனில், அந்த நீரூற்றின் மூலமாக தமது குழந்தை காப்பாற்றப்பட்டதன் மகிழ்ச்சியில் அன்னாருக்கு நன்றி செலுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகியிருந்தது. எல்லாம் வல்ல அல்லாஹ் தண்ணீருக்கான ஏற்பாட்டை இவ்வாறு செய்து விட்டான். தற்போது உணவிற்கு கவலை இருந்தது. தற்செயலாக ஒரு பயணக் குழு வழிப் பாதையை மறந்து விட்டது. மேலும் அக் குழு ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் அமர்ந்திருந்த அந்த இடத்தை வந்தடைந்தனர். பயணக் குழுக்கு தண்ணீருக்கான கடும் தேவை இருந்தது. அவர்கள் அங்கு நீரூற்றைக் கண்டதும், நாங்கள் தங்களுடைய குடிமக்களாக இங்கு வசிக்கின்றோம்; தாங்கள் எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்கள் அதற்கு அனுமதி நல்கி விட்டார்கள். மேலும் அவர்கள் அங்கு ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோரின் குடிமக்களாக வசிக்கத் துவங்கினர்.இன்று வரை ஹஸ்ரத் ஹாஜிரா (ரலி) அவர்களுடைய இந்த சம்பவத்தின் நினைவாகவே ஸஃபா மற்றும் மர்வா குன்றில் ஹாஜிகள் ஏழு முறை ஓடுகின்றனர்.(தொடரும்....)

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 32,
காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * * * *

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230




All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad